புத்திரத்தானமீதிற் புகழ்பவரிருக்கவஞ்சில்
உத்தவர்நீசமாக வுறைந்திடச்சுபர்கள்பார்வை
சத்துருமேயில்லாதாகிற் சாதகன்றனக்குப்பிள்ளை
சுத்தமேயில்லையென்று சொல்லுவார்மரணமென்றே 33

சந்திரன்வியாழங்கூடித் தந்தலக்கினத்திலேற
ஐந்தினிற்பாவர்வீழ்ந்தே வழகுடனிருந்துவாழச்
சுந்தரச்சுபர்கள்பார்வைத் தோன்றிடாதிருக்கவந்
தோர்
முந்தவேமரணமாகு மென்பதுமொழியலாமே 34

மக்கள்தானத்திற்பாவர் வந்திடவைந்திற்கோளன்
தக்கபாவர்கள்மத்தி யத்திலேசார்ந்துநிற்க
மிக்கதாய்ச்சுபர்கள்கூட விரும்பியேநோக்கமில்லான்
துக்கமாய்ப்பிள்ளையில்லான் துயரொடுமரணமா
வான் 35

பாவர்களிடையிற்பொன்னன் பதிந்திடவைந்திற்
கோளன்
நீவிலாப்பலமோவீன மாகவேயிருந்துவாழ்ந்தால்
மேவியசுபர்கள்கூட விளங்கியபார்வையில்லான்
ஆவியில்கிலேசமாகி யாண்மலடாவானன்றே 36

சொல்லியவைந்தாந்தானம் புதனுடைவீடாய்த்
தோண
அல்லதுமந்தன்வீடா யமர்ந்திடத்தானமீதில்
வல்சனிகுளிகன்கூடி வாழ்ந்திடப்பார்த்துநிற்கச்
செல்வமாய்வாழ்வானாலும் புதல்வரில்தத்துகொள்
வான் 37

தேடியவைந்திற்பாவர் பார்த்திடத்தெய்வசாபங்
கூடியேபிள்ளைசாபங் குணமுடனுறிற்கோளன்
நாடியேயைந்திலேற வல்லதுபார்த்துநின்றால்
பாடுமந்தணன்சாபத்தால் பலித்திடும்பிள்ளைசா
வாம் 38

சேயொடுவைந்திற்கோளன் சேர்ந்திடவாறினாதன்
தூயவரென்னப்பார்க்கத் தோன்றியசுபரானாலும்
மாயவனோக்கமில்லான் வந்திடும்பிள்ளைக்கெல்லாம்
மாயசத்துருவினாலே மாய்ந்திடும்பிள்ளையென்றே 39

நாலினிற்பாவர்வாழ வன்றியுநாலிற்கோளன்
கோலியசனியோடேகக் குணமுடனெட்டீராறில்
வாலிபப்பாவர்வந்து வளர்ந்திடமாதாவாலே
சோலியால்பிள்ளைசாவா மென்பதைச்சொல்லுங்
காலே 40

பாக்கியத்ததிலேபாவர் பார்த்திடவைந்திறைதன்
வாக்கொடுசனியோடேகி வந்திடும்குளிகன்றானும்
தீர்க்கமாயொன்பானேந்திற் சேர்ந்திடப்பிறந்தபிள்ளை
ஆக்கமாம்பிதுர்தோடத்தா லழிவதுகண்டுகொள்ளே

படமுடன்ராகுகேது பரிவுடனஞ்சிலல்லால்
திடமுடன்பார்க்கவஞ்சில் சேர்ந்தவன்பலவானன்றி
அடவுடனேந்தாந்தான மதிபலவீனமானால்
இடவுடன்சர்வதோட மெழுந்திடும்பிள்ளைசாவாம் 42

அந்தணனேந்திறைத னடவுடனேழிற்கோளும்
வந்திடாசியொன்றில் மருவிடச்செவ்வாய்கூடில்
சுந்தரத்துட்டதெய்வ தோடத்தாற்பிறக்குஞ்சேயை
அந்தகன்றனக்குப்பிள்ளை யாமெனவழைத்துப்
போவான் 43

ஐந்தினில்வாழுங்கோளு மதிபலமாகவாழ
ஐந்தினுக்குடையோனாலே யன்னவன்றன்னையின்
றேன்
முந்தவேநோக்கமில்லா மொழிவதுதத்துப்புத்திரன்
செந்திருவனையமாதே சேதியையறிந்துபாரே 44

அம்புலிபாவராசி தன்னிலேயடைவாய்நிற்க
நம்பியேவஞ்சிற்கோள னலமுடனேன்பான்மீதில்
தம்பியாமிலக்குநாதன் சார்திரிகோணந்தன்னிற்
கும்பிடுஞ்சாதகற்குக் குணமுடன்பிள்ளைதத்தாம் 45

புத்திரத்தானநாதன் புகழும்ரெட்டித்தராசி
உத்திடவல்லால்நாலி லூறிடமைந்தன்வம்சம்
பெத்திடத்தத்துப்பிள்ளை பேணுவானென்றுமின்னே
சத்தியமாகச்சொன்ன ஜாதகபாரிசாதம் 46

வேதுநாட்சேன்று புத்திரருண்டாம்.

அஞ்சினுக்குடையோன்மந்த னங்கிசமேறிவாழ
மிஞ்சியவியாழும்வெள்ளி மிகுந்தசொட்சேத்திரவம்சம்
கொஞ்சியதத்துப்புத்திரன் கொண்டவன்றனக்குநல்ல
தஞ்சமாப்பிள்ளையுண்டாஞ் சாத்திரப்படியேதானே 47

புத்திரத்தானநாதன் புகழ்சனியங்சமேற
உத்தநல்வியாழஞ்சுங்க னுயர்சொட்சேத்திரவங்சந்
தான்
பெத்திடமுத்திகொண்ட பெண்டீர்க்குப்பிள்ளையில்லை
வத்திரமாகவிரண்டாந் தாரமுண்டாகிற்பிள்ளை 48

பாக்கியத்ததிபனேந்தின் பதியெனும்வியாழந்திங்கள்
ஆக்கமாந்திசைகடன்னி லபகாரங்களிலேபிள்ளைத்
திர்க்கமாயுண்டாய்வாழுஞ் சேதியையறியவேண்டி
எர்க்கவேயுரைத்தநூலை நானுமேயுரைக்கலுற்றேன் 49

மகவுடைத்தானநாதன் வரிசையாயைந்தில்வந்தோர்
சுகமுடன்பார்த்தோர்மிக்க சுபகுருயிவர்களெல்லாம்
மிகபலவீனமாகி யீனமாயெட்டீராறில்
அகன்றிடத்திசைபுசிப்பி லாகுநாள்புத்திரநாசம் 50

சொல்லியநாளும்வேறே சோர்வின்றிப்பலவானுக
வெல்லவேதிசைகடன்னில் மேவவேவபகாரத்தில்
ஒல்லையில்புத்திரருண்டா முருசம்பத்துடனேயாகும்
நல்லராசாக்களாலே நலமுடன்பிரீதியுண்டாம் 51

சொன்னவைந்துடையகோளச்சுபரொடுவாழுவல்லால்
மின்னுமோகதிரோன்றுனும் பெருமையாய்ச்சுபரோ
டேகத்
தன்மையாயைந்திற்றனே சதிரொடுசுபரேயூற
அன்னமேகேளாய்தந்தை யானவன்சுகத்தில்வாழ்
வான் 52

சூரியனேந்தினுதன் சுகமொடுபார்வதாங்சம்
காரியமாகவேறக் கண்டிடவல்லானுச்சான்

சீரியவாட்சியம்சந் திடமுடனேறிநின்றால்
பாரினிற்றந்தைதீர்க்க வாயுளாற்பரிந்துவாழ்வான் 53

கதிரவனோந்தினுதன் கனபகைநீசவம்சம்
சதிரொடுமேறிவாழச் சனியொடுகுளிகன்றானும்
அதிபலவீனமாக வன்னவனிருந்துவாழ்ந்தாற்
பதியினில்வாழுந்தந்தை பரகதியடைந்துபோவான்54

ஐந்தினுக்குடையோனல்ல வறிவுடைச்சுபரேயாகில்
வந்திடுராசிநீசப் பகையத்தமனங்களாக
உந்தியகொடுரசட்டி யங்கிசம்குணமாயேற
உந்திடாத்தந்தைசாவா முறுதியாய்ப்பார்த்துக்
கொள்ளே 55

தந்தைலக்கினத்துக்கைந்திற் பத்தினிலிராசிதன்னில்
வந்திடும்பிள்ளைக்கந்த ராகுலக்கினமாவந்தால்
சிந்தையுங்குணமும்வண்ணஞ் சேர்ந்திடுங்கிரியை
யெல்லாம்
மந்தமாய்த்தந்தைபோல வறிவுடனிருந்துவாழ்வான்

அய்யன்லக்கினத்தில்மூன்றும் ராசியிலன்னோர்சன்மம்
செய்திடத்தந்தைக்காளாஞ் செப்புலக்கினத்துக்
கெட்டில்

பையவேயாறிற்பிள்ளை லக்கினம்பதியுநாளில்
வெய்யசத்துருவாம்பிள்ளை யாமெனவிரைந்து
சொல்லே 57

சந்திரனுலிற்கோளன் றந்தைலக்கினத்துநாதன்
ஐந்தினுக்குடையோனின்றோ ரதிபலவீனமாக
விந்தையாய்நாலாந்தான மிகுபலவீனமாகில்
சிந்தையாலிரங்குந்தாயார் கெற்பமாய்செத்துப்
போமே 58

அம்சபலன்.

ஆதித்தனிருந்தராசி யங்கிசத்தைந்தில்மூன்றில்
சாதித்தவெய்யோன்வந்தால் தந்தைதாயுபாதியாகும்
சோதித்தகதிரோனம்சந் தோன்றியவிராசிதன்னில்
வாதித்தவங்கிசத்தில் மதிவரில்மாதாபீடை 59

நாலினுக்குடையோனஞ்சி ஞதனறெட்டீராறில்
சோலியில்லாமற்றந்தை சோருங்கால்முகத்தில்தோன்
றுன்
வாலிபம்வைந்தினுதன் வளர்த்தியதானமூன்றில்
வேலிபோல்தகப்பன்றன்னை விரைவொடுகாத்துக்
கொள்வான் 60

புத்திரத்தானநாதன் பொருந்தியேசுபனுயம்சம்
பத்தியாச்சுபராயன்னோர் பார்த்திடக்கூடிநின்றால்
சத்திரங்கட்டிவைத்துச் சதிரொடுவன்னதானம்
மெத்தவேகொடுப்பான்கீர்த்தி மிகுந்திடுந்தன்மவா
னும் 61

ஐந்தாம்பாவகம் முற்றுப்பெற்றது.

ஆறாம்பாவகம்.

—:o:—

ஆறினின்பலனேமிக்கா யறிவுடனுரைக்கவேண்டில்
கூறியரோகமக்கள் கொடூரவாக்கினைகளெல்லாம்
தேறியவவதிசத்துரு திருந்தியதானந்தன்னில்
வாறியேயுரைக்கவாறின்வகையிதுவறிந்துகொள்ளே 1

சந்திரன்புந்தியாறின் சதிரனுமிவர்கள்கூடி
அந்தலக்கினசம்பந்த மாகவேயிருந்துவாழ்ந்தால்
சொந்தமாயுள்ளகோச மீதிலேசோர்வுநோயாம்
உந்திடுமெலிவனுவா னென்றதையுரைக்கலுற்றேன் 2

சுக்கிரனேழிற்கோளன் சுகமுடனாறிலேற
மிக்கதாய்சனிசெவ்வாய்தான் மிடியினாலவரைப்
பார்க்கத்

தக்கசத்துருவால்வாதைத் தானத்தைச்சுபர்கள்கூட
விக்கினமில்லைபார்த்தால் விளங்குசத்துருவும்போமே

ஆறினுக்குடையோன்லக்கி னதனுமறிவாய்வெய்
யோன்
தேறியேபகைநீசங்கள் சேர்ந்துடனாறிலேற
ஊறியலக்கினத்தி லுயர்ந்தநட்பாளரானாற்
பேறியேதந்தைமூலஞ் சத்துருபெருகுந்தானே 4

சொன்னவிம்மூன்றுகோளுஞ் சுகமுடனாட்சியுச்சம்
பன்னுவர்க்கோத்தமாகப் பகையாவன்தாயாதியினால்
இன்னமுமுடம்பிற்புண்ணு மிசைந்திடுமாறில்வாழ்
வோன்
தன்னைச்சத்துருவாற்பார்க்கச் சரீரத்திற்புண்களுண்
டாம் 5

ஆறினுக்குடையோனத்த மனங்களாம்நீசமாகிற்
றேறிலக்கினமேயாகிற் சேர்ந்திடவொருதாயாகிக்
கூறியகதிரோனைக் கோள்களும்வகையாயாறில்
ஊறியவன்றேன்மூல சத்துருவுண்டாமென்னே 6

சத்துருத்தானநாதன் தகுபாவர்மூன்றுபேரோ
டொத்திடக்கூடில்மாடு திரவியமுண்மைசத்துரு

மத்துநல்சுபர்கள்மூன்று பேரொடுகூடிநின்றால்
சத்துருவில்லைமாடுங் குதிரையுஞ்சதிராயுண்டாம் 7

சொல்லியவாறிற்கோளன் சுபனெனவன்னேன்கூடப்
புல்லியகிரகந்தானும் புகழ்சுபராகக்கேந்திரம்
மெல்லவேதிரிகோணத்தில் மேவியேயிருக்குநாளில்
அல்லலுமில்லைசத்ரு வழிந்திடுமென்றுசொல்லே 8

புத்திரத்தானநாதன் கூடவேபொருந்தக்கோளன்
சுத்தமாய்ப்பலமாய்த்தோன்றத் திரவியங்கொஞ்ச
நாசம்
மத்திபமிரண்டுபேரில் வன்பிலனொருவனாகச்
சத்துருபயமும்புண்ணுங் கொஞ்சமாஞ்சரீரமீதே 9

ஆறினுக்குடையகோளன் கூடவேபாபிமாறில்
வேறியகோளானாலு மிக்கவும்பலமோவீனம்
கூறிடுங்காரகன்னால் கூடியபவதியெல்லாம்
தேறியேகண்டுகொள்வாய் சேதியையுரைத்தபோதே

ஏழினுக்குடையோனேடு மியல்பொடுபாவர்கூடி
வாழுலக்கினத்திலேற வந்திடுமுடம்பிற்புண்ணும்
தாழ்வில்பாக்கியத்திலைந்திற் றண்டியேவன்னோர்வந்
தால்
ஆழுமையனுக்குமேலே யானரோகத்தில்புண்ணும் 11

சொல்லியகோளனைந்திற் றேன் றிடப்புத்திரர்க்கு
வல்லமினிலிற்பாவர் வந்திடமேலேபுண்ணும்
நல்லவேழ்தானமீதி னுடிடத்தீர்க்கமொன்பான்
சொல்லிடவம்மானுக்குத் தீவினையாலேபுண்ணும் 12

மூன்னமேயுரைத்தகோட்கள் மூன்றினிலிருந்துவா
ழும்
என்னவேசகோதரர்க்கு லாபத்தால் மூத்தோர்க்
கென்க
அன்னமேயாறெட்டாய வானசாதகர்க்குரோகம்
சொன்னதுபவனரோகம் தோன்றியவுடம்பிற்புண்
ணும் 13

ஆதித்தனேழிற்கோளு மாறினிற்கிபனின்னோர்
வாதித்துக்கூடிலக்னம் வந்திடவருத்தரோகம்
பேதித்ததலையில்ரோகம் பெருகிடுமதியோடேகச்
சோதித்தமுகத்திற்செவ்வாய் தோன்றிடக்கண்டத்
தாமே 14

புந்தியோடேகவன்னோர் நாபியிற்புண்ணுமென்க
அந்தணனுகிற்பொல்லா வரித்தலம்வெள்ளிகண்ணில்
மந்தனோடாகில்வாயில் ரோகம்ராகுகேதுவுக்கு
உந்தியவுதரரோக வியாதியாலுறங்குவானே 15

புதனுடன்லக்கினுதன் பொருந்திடவல்லாற்புந்திப்
பதமுடன்பார்க்கப்பொல்லா ரோகமாய்ப் பதியு
மென்க
விதமுடனுறிற்கோளன் மிகுபவருடனேகூடப்
பதவியால்பாவர்பார்க்கப் பலமிலாதுண்டாஞ்சத்ரு 16

இலக்கினமுதலாயுள்ள வதிபதிபார்க்கராகுத்
தக்கதாய் மந்தனுறிற் சதுரனுமொன்றுய்க்கூடிச்
சுக்கிரனுலேபார்க்கப் பட்டத்தாற்றுரகந்தன்னுல்
மிக்கவராலேமெத்த விளைந்திடும்பயமென்றேதே 17

ஆறினுக்குடையோனெட்டி லாறினிற்பன்னிரண்டில்
ஊறிடநீசவத்த மனங்களாயொடுங்கிவாழ்ந்தால்
கூறியலக்குநாதன் கொடுமையாப்பலமில்லாமல்
தேறலாம்சத்ருநாச மென்றதைச்செய்யலாமே 18

சத்துருத்தானநாதன் தங்கிடக்கோபுராங்சம்
முத்திடக்கதிரோன்பார்க்க வுயர்ந்தலக்கினத்துநாதன்
மெத்தவேபலவானுக விளங்கவேநல்லோனென்றும்
பெத்தவரவனேச்சொல்லார் பிறர்க்குபகாரியாமே 19

ஆருட்டபாவகம் முற்றுப்பெற்றது.

ஏழாம் பாவகம்.

கண்டிடவேழாந்தானங் காரியமறியவேண்டிப்
பெண்டிருங்குணமுமல்லாற் பேசியகர்மந்தன்னைக்
கொண்டிடுஞ்செய்திபுத்திரர் குறிப்பும்யாத்திரையுமாக
வண்டமர்குழலினாளே சுகத்தையும்வகுக்கலாமே 1

சுக்கிரனேழிற்கோளன் சுகமொடுராகுதானும்
மிக்கதாயொன்றாய்க்கூடி மேவிடவேசைக்காளாம்
தக்கதாய்வேழிற்பொன்னன் சார்ந்திடவல்லாற்பார்க்கத்
துக்கவேசைக்காளல்லாற் சொல்திரிகமனந்துய்ப்பான்

ஏழினுக்குடையோனெட்டீ ராறினிலாறில்வாழ
ஏழினிற்பாவராயப் பார்த்திடத்திரியேயில்லான்
ஏழினிற்குடையோன்சுங்கனிருவருங்கூடிப்பாவர்
வாழிராசிகளிலின்னோர் மருவிடக்காமமோகன் 3

சுங்கனுமேழிற்கோளன் சுபராசிமீதிற்றோன்றிப்
பொங்கமாய்ச்சுபரேகூடிப் பொருந்திடவல்லாற்பார்க்கத்
துங்கனும்வாழ்வனாகித் துரகவாகனமுந்தோன்றி
வங்கம்போலானவெள்ளைக் குடையினிலிருந்துவாழ்வான் 4

ஆறினுக்குடையோனேழுக் கதிபனுமிரண்டின்கோ
ளுந்
தேறியவெள்ளிதானுந் திரண்டலக்கினத்திலேறச்
சிறியபாவர்கூடிச் சேர்ந்திடப்பிறந்தபிள்ளைக்
கூறியகர்மமீதி லுயர்ந்திடமோகமுண்டாம் 5

சத்துருத்தானநாதன் தானுலக்கினத்திற்கோளும்
முத்திடும்பாவரோடு மூரிடக்காமமோகன்
வைத்தகாமத்தினாதன் றன்னெடுவாக்கிற்கோளான்
பெத்திடுபாவரேழிற் பெருகிடக்காமவானும் 6

வாக்கினுக்குடையோனேழுக் குடையவன்லக்குநா
தன்
போக்கிலேவேழில்வந்து பொருந்திடவனேகபாவம்
பாக்கியம்போலேசெய்வான் பரத்திரிகமனத்தானும்
நீக்குடன்பொல்லானென்றே நிகழ்த்துவார் லோக
மீதே 7

கன்மநாயகனுமிரண்டுக் கதிபனுமேழிற்கோளும்
சொன்னபத்தாமிடத்திற் றேன்றிடச்சோரபத்தா
பொன்னேழுடையோனேந்திற் பொருந்திடப்பாவர்
பார்க்க
தன்மகனவேசைக்கார னென்னவுஞ்சாற்றலாமே 8

அந்தணன்சுங்கன்புந்தி யம்புலியோடுமேழில்
வந்திடுமனேகம்பேரை மருவிடக்கவனுவான்
சுந்தரச்சுங்கனேழிற் றேன்றிடப்பலவானுகச்
சொந்தமாயனேகம்பெண்கள் தன்னெடுஞ்சுகத்தைத்
துய்ப்பான் 9

சுக்கிரன்செவ்வாயேழுக் குடையவன்மாயையாகில்
மிக்கதாயேழில்வந்து மேவிடவல்லாற்சொன்னேம்
தக்கதாய்மதியுமாறிற் சார்ந்திடச் சாதகர்க்குப்
பக்கமில்மின்னுரொன்று மென்பதைப்பகரலாமே 10

பன்னிரண்டாறிலெட்டிற் பதிந்தமால்பலமோவீனம்
என்னவேமலட்டுப்பெண்டி ரில்லையாம்திரியுமில்லான்
மின்னியகதிரோன்சுங்க னேழினிலிலக்கினத்தில்
உன்னவேமலட்டுப்பெண்டி ருண்டவன்புருடனுவான்

சந்திரன்லக்கினத்திற் சேர்சமராசியாக
வந்தசாதகனேரூப வர்ணமேஸ்திரீபைப்போல்வான்
விந்தையோன்ராசிவர்க்கப் புருடனுய்விளங்குங்காலை
அந்தனுற்பத்தில்பெண்டி ரமர்ந்திடுமென்னலாமே 12

ஏழினிற்செவ்வாயன்னே ரிராசியங்குசமாயேற
வாழுலக்கினத்திற்செவ்வாய் வந்திடவெழினீசஞ்

சூழத்தமானக்கோட்கள் தோன்றிடவிலக்கமான
ஆழும்வெள்ளாட்டிக்கைம்பெண் ணணேந்திடும்புருஷ
ஞவான் 13

சொன்னவிம்முறையேபெண்கள் சாதகமதிலே
தோன்ற
அன்னமேபுருடன்சாவா னல்லதுபுருடர்க்காஞல்
தன்னமையானபெண்டீர் தான்செத்துப்போவா
ளென்று
முன்னமேயுரைத்தநூலை மொழிந்ததைமொழியலுற்
றேன் 14

ஏழினிற்சுபராய்ப்பார்க்க வியல்புடன்ராசிநன்ருய்
வாழினில்ரூபியாக வருங்குணவதியாம்பெண்டீர்ச்
சூழ்மதிபலவானேழிற் ருேன்றிடச்சாதுபெண்டீர்த்
தீழ்மதியேழிற்சேரத் தினமச்சத்திடும்பெண்டாவாள்

ஆதித்தனேழினுச்ச மாட்சியாய்ச்சுபரேபார்க்கப்
பேதித்தசாதுபெண்டீர் பெற்றலக்கினத்திற்றிங்கள்
சோதித்தயேழிலாறுங் தோன்றிடப்பாவர்கூட
வாதித்தபகைநீசங்கள் வரில்விபசாரப்பெண்டாம் 16

சோல்லியவேழிற்பாவர் துலக்கமாயிருந்துவாழ்ந்தால்
புல்லியஸ்திரீயுமவ சாரியாய்ப்போவாள்வெய்யோன்

நல்லையிலேழிலேக வுயர்திரிமலடிநட்டம்
மல்லசந்திரனேயேழி லாய்விபசாரிப்பெண்டாம் 17

திருந்தியசெவ்வாயேழிற் சேர்ந்திடத்திரியேசாவாள்
மருங்கொடுரோகக்காரி யானவள்சுகமுமுண்டாம்
வருந்தியசனியும்ராகு மேழினில்மருவிவாழ்ந்தால்
பொருந்தியகைம்பெண்போகம் தனித்தனியிருந்து
வாழ்வார் 18

புந்தியுங்குருவுமேழிற் பொருந்திடப்புனிதப்பெண்டீர்
வந்திடும் நல்லபிள்ளை வாய்த்திடுமேழிற்சுங்கன்
உந்திடப்பாக்கியப்பெண்டீ ருதவியாம்குளிகன்கேது
சொந்தமாயேழிலாய தூரத்திரியாலேவாழவான் 19

அந்தணனேழினீச மாகவேதிரியால்நட்டம்
மந்தனேயேழில்மீன மாகவேமரணம்பெண்டீர்
சிந்தையாய்ச்சனிசெவ்வாயு மிராசியுநவாங்கமீதில்
சொந்தமாய்வியாழமேற சொல்லுதிரியவசாரிசென்றே

நீலனுஞ்செவ்வாயேழி னின்றிடப் பெண்டீர்சோரம்
மூலமேழெட்டிற்பாவர் முற்றிடப்பன்னிரண்டில்
ஏலவேசெவ்வாயூறி லேழினுக்குடையோனெட்டில்
சீலமாயாறிரர்றிற் சேர்ந்திடத்திரியால்சாபம் 21

வாக்கினிலேழிற்கோளன் வந்திடவனேகம்பாவர்
தாக்கிடப்பாவர்பார்க்கச் சார்ந்திடத்திரிகள்மூன்றும்
ஆக்கமாயேழிற்கோ னங்கிசஞ்சுகமாய்ப்பார்க்கத்
தீர்க்கநல்லங்குசத்தில் திரியுண்டாய்ச்சேர்வான்றானே

ஏழினிற்குடையோனுச்ச வாட்சிராசியிலேயேகித்
தாழ்வில்கேர்திரத்திரிகோணந் தன்னிலேயிருந்து வாழ்ந்தால்
வாழ்வொடுபத்திற்கோளன் வலியவேபார்க்கவந் தோன்
வாழுவானனேகம்பெண்டி ரணைந்திடும்புருஷன்றானே

கேந்திரங்களிலேயேழுக் குடையவன்மெதுவாய்வாழ
வாய்ந்தநல்சுபரேபார்க்க வந்திடும்ராசிநன்றும்
சார்ந்திடுஞ்சுபர்களங்சந் தாழ்ந்திடச்சாதகற்கு
ஆய்ந்தநல்திரியேயொன்று யமர்ந்திடுமறிந்துபாரே 24

புந்தியுமேழிற்கோளும் பொருந்தவேபாவர்கூடி
வந்திடப்பகைநீசங்கள் வர்க்கமாய்ப்பாவர்பார்க்க
அந்தமாயுள்ளபெண்டி ராமதுசெந்துப்போயும்
விந்தையாய்க்குலமுநாசம் விளங்கிடுமென்னலாமே 25

பாவர்களுடனேயேழின் பதியெனத்தீயபாவர்
தீவரமெனவேபார்க்கச் சேர்பவவர்க்கமேறில்

ஆவதேபொல்லாவங்ச மதில்திரியாகும்பெண்ணே
மேவிடுஞ்சாதகற்கு விளங்குமென்றுரைக்கலாமே 26

எத்தனைகிரகமேழின் என்னவேசுங்கனேடும்
பெற்றிடுங்கிரகந்தன்னைப் பேணியேதிரியைச்சொல்லப்
பத்திடுமுச்சக்கோள்கள் தன்னையும்பரிவாய்ப்பார்த்து
ஒத்தநல்திரியாமென்றே யுரைக்கலாமறிந்துபாரே 27

சுக்கிரன்வீட்டுக்கேழுக் குடையவன்றோன்றவிரண்டில்
மிக்கதாய்கிரகம்வாழ விளங்கவேசுங்கனேடுத்
தக்கதாய்கிரகமென்னச் சார்ந்திடுந்திரியாமென்ன
விக்கினமாகக்கண்டு விளங்கவேவேண்டுமின்னே 28

சந்திரனெந்தராசி தன்னிலேயிருக்கிறுனே
அந்தராசியில்வியாழ னணைந்திடவிவாகமாகும்
சுந்தரச்சுங்கனேழுக் குடையவன்றிசைகள்தோன்ற
முந்தியவபகாரத்தில் முகிந்திடுவிவாகந்தானே 29

ஏழினுக்குடையோன்றன்னே டேகியேகிரகமேழின்
வாழ்வெனுங்கிரகமின்னேர் வருதிசையபகாரத்தில்
வாழ்வினையானபெண்டீ ருதவுமாமிரண்டிற்கோளன்
சூழ்திசையபகாரத்திற் சுபகலியாணஞ்சொல்லே 30

ப்பாக்கியத்ததிபன்பத்துக் குடையவன்றிசைகடன்னில்
வாக்கமாதபகாரத்தி லானதோர்விவாகஞ்சொல்லத்

தீர்க்கமாஞ்சுபர்களாகிற் றிசையினிற் றிரவியலாபம்
வாக்குடன்லபிக்குமென்று வகுத்தனர் நூல்வல்
லோரே 31

லக்கினத்ததிபனெந்த நவாங்கிசம்நாடினானோ
மிக்கதாயன்னோன்வாழும் ராசியில்வியாழந்திங்கள்
நிற்கவேவிவாகஞ்சுங்கன் நிகழுமேழுடையோன்ராசித்
தக்கதாய்ப்பொன்னன்திங்கள் சார்ந்திடச்சாரும் பெண்
டீர் 32

ஏழினிற்கதிரோனாகி லியல்புடன்மலடிசேர்வாள்
தாழ்வில்சந்திரனேயாகில் சங்கீதப்பெண்ணைச்சேர்வன்
தாழ்விலாச்சேயேயாகிற் றாரமானவளைச்சேர்வன்
தாழ்புதனாகில்வேசை தன்னையேயணையப்போவான் 33

அந்தணனேழிலாகி லணைந்திடும்பிராமணத்திரி
சுந்தரச்சுங்கனாகிற் சுபகெர்ப்பத்திரியைச்சேர்வன்
மந்தனேயேழில்நீசத் திரிதனைமருவிவாழ்வான்
விந்தராகுக்கேதுத்தான் விரும்புவான்விலக்கமானாள் 34

ஆதித்தனேலாழினா லனைந்திடுமிடமேகாடுச்
சோதித்தமதியோனேழிற் றேய்வதுநல்லவீடாம்
வாதித்தசெவ்வாயேழில் மருவுவன்குட்டிச்சுவராம்
சூதத்தபுதனால்சித்திரந் தோன்றிடுமச்சுவீடாம் 35

அந்தணனேழினிற்க வணையுக்தேவாலயத்தில்
சுந்தரச்சுங்கனேழிற் றோன்றும்நீரிடங்கள்சொல்லும்
மந்தனேயேழில்நல்ல மடந்தனிற்கிரீடைசெய்வான்
விந்தைராகுக்கேதுத்தான் விஷ்ணு வாலயத்தில்
மேவும் 36

சுங்கனுமேழிற்கோளுஞ் சுபரெனப்பலவானாகில்
பொங்கமாயேழில்வந்துப் பொருந்திடப்பாவர்கூடச்
சங்கையால்பாவர்பாக்கிற் சாதகன்மரணமாகி
தங்கணமானபெண்டீர் தானுமேமரணமாவாள் 37

சுக்கிரனேழிற்கோளன் சுகமுடன்கூடிவாழச்
சுக்கிரனேழிலாக வல்லதுசுகமாய்ப்பார்க்கச்
சுக்கிரன்றாசியேழாந் தானமாய்த்தோன்றுமாகில்
சுக்கிலநிதம்பந்தன்னைச் சுகமொடுசும்பிப்பானே 38

இப்படியிரண்டிற்கோளன் றன்னொடுமிருக்குமாகில்
அப்படிப்பலனைச்சொல்ல வானபத்துடையோன்சுங்
கன்
செப்பமாயிருவர்தானுஞ் சேர்ந்துடனேழிலாய
மைப்புருங்கண்ணாளல்குல் மருவியசும்பனமே 39

ஏழாம்பாவகம் முற்றுப் பெற்றது.

எட்டாம்பாவகம்.

எட்டினின்குணங்கள்தன்னை யியல்புடனுரைக்கவேண்டில்
அட்டமமென்னும்பேரா மாயுளின்வலுமைதீர்க்கம்
இட்டமாயுரைக்கவற்ப வாயுளோடரிட்டமெல்லாந்
திட்டமாய்மரணந்தானுந் திடம்படச்செப்பலுற்றேன் 1

அட்டமத்ததிபன்பன்னி ரண்டினிலாறில்வந்துத்
திட்டமாய்பாவர்கூடிச் சேர்ந்திடவற்பாயுள்தான்
தட்டலக்கினத்துநாதன் தன்னொடுமெட்டிற்கோளன்
சட்டமாயாறீராறிற் சார்ந்திடவற்பாயுள்தாம் 2

எட்டினிற்குடையோனெட்டி லிருந்திடத்தீர்க்காயுள்தான்
இட்டலக்கினத்துநாத னேழிற்பெருமெட்டிற்கோளன்
திட்டமாயாறிற்கோளன் தன்னொடுபன்னிரண்டில்
திட்டமாயிருக்கவாயுள் தீர்க்கமாய்திருந்தச்சொல்லே 3

பத்தினுக்குடையோனெட்டிற் பதியெனுலக்கினாதன்
இத்தனைபேருங்கேந்திர மேறிடலக்கினத்தில் ௰

பெத்திடத்தீர்க்கவாயுள் பேசியகோட்கள் மந்தன்
அத்தனைகோள்பலவீன மாகினலற்பாயுள்தாம் 4

கன்மத்தோன்சென்மநாதன் கருதியவெட்டிற்கோளன்
தன்மத்தாற்பலமாய்த்தீர்க்க வாயுளான்சரீரனல்லான்
வன்மத்தானிரண்டிற்கோள்கள் வலுமையால் மத்திய வாயுள்
உன்மத்தா லொருவனல்லா னுரைக்கலாமற்பாயுள் தாம் 5

சொன்னவிம்மூன்றுகோளுஞ் சோர்பலவீனமாகில்
பன்னிரண்டாண்டுக்குள்ளே லக்கினமரணமாக
இன்னமோரெட்டிற்கோள னிருந்திடும்ராசிநன்றாய்
அன்னவருடனோநற்கோ ளமிழ்ந்திடத்தீர்க்காயுள்தாம் 6

பாபராசியிலேவட்ட மாதிபன்பதியிற்பாபர்
மேவிடக்கூடிவாழ விரையவனெட்டீராறில்
தாவிடவற்பாயுள்தான் தரணியில்சங்கமின்னே
ஆவியைப்பொருளாய்நம்பு லாகுமோவற்பநாட்டே 7

அறிவுடனிலக்கினத னறீராறெட்டிலாதல்
பிறிவுடனெட்டிற்கோளன் பேசியதலத்திற்பாவர்

குறியுடன்கூடிப்பார்க்கக்கொடுநீசாஸ்தமனக்கோளாக
வுறுபகைராசியாகி லொடுங்கவேயற்பாயுள்தாம் 8

அட்டமாதிபனுலக்கி னாதனுமதிகவுச்சம்
சட்டமாயேறவல்லாற் கேந்திரத்திரிகோணந்தன்னில்
திட்டமாந்தீர்க்காயுள்தாந் திவ்வியகோளாட்சியாக
முட்டவேதீர்க்காயுள்தாம் மொழிவதுசுகியுமாவான் 9

சென்மவானட்டமாதி பதிதிரிகோணகேந்திரம்
நன்மையாய்ப்பலவானாக நாடிடத்தீர்க்காயுள்தாம்
தன்மலக்கினத்துநாதன் தானங்கள்தனிலேகோள்கள்
அன்பொடுநற்கோள்பார்க்க வாயுள்தீர்க்கமாரோக்கி
யம் 10

அட்டமாதிபனீராறி லெட்டினிலாறிலேகச்
சட்டமாய்திசைபுசிப்பிற் றன்னிலேமரணஞ்சொல்லத்
திட்டமாய்ச்சனியன்வாழு மிராசியின்றிசைகோள்தன்
னில்
எட்டின்கோளபகாரத்தி லியல்புடன்மரணஞ்சொல்
லே 11

செப்பியவட்டமாதித் திசையபகாரந்தன்னில்
ஒப்பியவட்டமாதி பதியுடனேதுங்கோள்கள்

தப்பியதிசைபுசிப்பிக் சாத்தியசாமான்யமென்றும்
அப்பிலவீனமன்னோ ரவதிசையபகாரமாகா 12

பன்னிரண்டாறிலெட்டிற் பதியலக்கினத்துநாதன்
தன்னேடுகேதுராகு சார்ந்திடத்திசைபுசிப்பில்
சென்மவானெட்டினுத னிவரொடுசேர்ந்தகோட்கள்
அன்னவர்திசையபகார மதிலவமிருத்துண்டாமே 13

எந்தராசியிலும்லக்கு நாதனுமெட்டிற்கோளும்
வந்ததாற்றிசையபகாரம் வாய்த்திடுமரணஞ்சொல்ல
வந்தலக்கினத்துநாத னறிவொடுலக்கினத்தில்
உந்திடத்திசையபகாரந் தன்னிலேயுபாதியுண்டாம்.

பத்திலுக்குடையோனெட்டிற் பதியலக்கினத்துநாதன்
சத்தியமந்தனின்னேர் தனிலிவர் பலவீனங்கள்
ஒத்திடத்திசையபகார முள்ளநாள்மரணமுண்டாம்
மத்தனேகுளிகனட்ட வர்க்கமுமடைவாய்ப்பாரோ 15

எட்டினுக்குடையோனெட்டி லிருந்தவர்திசைபுசிப்பில்
தொட்டிடச்சரீரமீது நோயந்திடவுபாதிசொல்ல
வட்டமாதிபனுநன்ருய் மதிபலவானுயானல்
சட்டமாய்ச்சரீரவாதை சற்றுமேயில்லைதானே 16

சென்மகாலத்துலக்கினர் நீபலவீனமாகில்
வன்மலக்கினத்துநாதன் வாழ்ந்திடுதிசையிலேயும்
நன்மையிலெட்டிற்கோள னடந்திடுந்திசையிலேயும்
தன்மயில்கெட்டகாலஞ் சார்ந்திடுமதிகந்தானே 17

சென்மவானிலக்கினுதி திசைபலவீனமாகி
நன்மையாயிவர்களுண்ணுங் திசையிலுமதற்கப்பாலே
தன்மவானட்டமாதி பதிசனிலக்கினத்தில்
வன்மையாந்திசைபுசிப்பில் வந்திடுமாணந்தானே 18

அட்டபாதிபனும்லக்கு நாதனும்பலமாயன்னோர்
இட்டமாய்க்கேந்திரகோண மேறிடயிவர்களோடுந்
திட்டமாய்வாழுங்கோட்கள் திசையபகாரமானால்
ஒட்டியரோகமல்லா லுடலவபாதமுண்டாம் 19

சொன்னலக்கினத்துநாதன் சுகமொடுமெட்டிற்கோ
ளன்
பன்னுகேந்திரத்திரிகோணம் பதிந்திடவட்டமத்தில்
உன்னியகிரகமூன்று முயர்திசையபகாரத்தில்
என்னலாமவமிருத்து விசைந்திடுமென்றுசொல்லே

எட்டினுக்குடையோன்லக்கு நாதனோடெவனானும்
ஒட்டியகிரகத்துக்கே வுயர்பலவீனமானல்

இட்டதிகாரத்தாலே யிவர்திசையபகாரத்தில்
விட்டவமிருத்துண்டாகு மென்னவும்விளம்பலாமே

ஐந்தினுக்குடையானேடே யடுத்திடுங்கிரகம்பார்த்து
வந்திடக்கதிரைத்தள்ளி மற்றவர்திசையிலாலும்
விந்தையாமபகாரத்தில் மிக்கவமிருத்துண்டாகும்
சந்தேகமில்லைமின்னே சதிரொடுங்கணிதத்தாலே 22

அஞ்சினுக்குடையானேடு வழுகுலககினத்துநாதன்
தஞ்சமாயெவரானுலுஞ் சார்திசையபகாரத்தில்
கொஞ்சியமாதந்தோன்று நாளுக்குக்குறித்தமுன்னுள்
மிஞ்சவேயங்கவீனம் விளைந்திடுமிருத்துத்தானே 23

கொஞ்சியபிதுர்த்தானத்தின் கோளும்லக்கினத்துக்
கோளு
மஞ்சியேகேந்திரகோண மடைவுடனிருந்துவாழ்ந்தால்
மிஞ்சியதிசைபுசிப்பில் விளைந்தபமிருத்துடண்டாகித்
துஞ்சுவாள்பெண்டீர்தானுஞ் சுகமனுமரணமாவாள் 24

இருந்தியசெவ்வாய்மந்த னந்தனன்றிங்கள்ராகு
பொருந்தியேவட்டமத்திற் போய்விடயெவரானுலும்
இருந்திடநாளுக்கப்பா லெமன்கொண்டுபோகும்
நானில்
வருந்தியேவைசூரியாலே வந்திடுமரணந்தானே 25

சந்திரனிரண்டிலல்லாற் சாருமட்டமத்திற்சாரப்
புந்தியுஞ்செவ்வாய்தானும் பொருந்தியேபத்திலேற
வந்திடுஞ்சாதகற்கு வருந்தியேயுடம்பில்வாழுங்
கந்தங்கற்ருழைநாற்றங் கனபுலால்மணமுஞ்சேரும் 26

எட்டினிற்பாபர்வந்து வேறிடவல்லால்பார்க்க
முட்டியரோகமெல்லா மூர்க்கமாய்த்தீர்க்கமாகும்
அட்டமந்தட்னினற்கோ ளண்டிடவல்லாற்பார்க்கத்
திட்டமாய்ரோகமில்லான் தினஞ்சுகவானுஞ்செப்பே27

எட்டாம்பாவகப் முற்றுபெற்றது.

ஒன்பதாம்பாவகம்.

ஒன்பதாமிடத்தைப்பார்த்து வோதியபலனே தென்னில்
அன்பனும்பிதுர்கள்தன்னை யானபாக்கியத்திலல்லால்
இன்புருசுபங்கள்தன்ம மியல்புடன்தபசுஆசான்
நன்பலனுடன்வியாழந் தன்னையுநாடிப்பாரே. 1

அந்தணன்பாக்கியத்துக் கதிபனுமறிவாய்வாழ
உந்தியதானம்நல்ல ருறுசுபர்வர்க்கமாக
அந்தமாஞ்சுபரேவாழ வல்லதுசதுராய்ப்பார்க்க
வந்திடும்பாக்கியங்க ளல்லதுயின்னுஞ்சொல்லே 2

பாக்கியத்ததிபனீசத்த மனங்களாய்ப்பாவர்வாழ
நோக்கினுந்தர்மமில்லா னுண்ணியநவத்தில்பாவர்
தாக்கிடவாட்சியுச்சஞ் சார்ந்திடச்சுபருங்கூட
ஆக்கமாம்பாக்கியங்க ளவனிடம்பிரியாதாமே 3

தந்தையாமிடத்தில்பாக்யத் ததிபனுஞ்சாரநன்றாய்
விந்தையாய்ச்சுபருங்கூடி விளங்கபாக்கியவானாகும்
ஐந்தினுக்குடையனின்னோ ராட்சியாவுச்சமானோர்
செந்திருவனையமாதே தீர்க்கபாக்கியவான்செப்பே 4

பாக்கியத்ததிபனைந்தின் பதியலக்கினத்துநாதன்
நீக்கருங்கருமத்தண்ணல் நிகழ்பெறவுச்சவாட்சித்
தாக்குமங்குசங்களேறிச் சார்ந்தினிதிருக்கும்நாளில்
ஆக்கமாம்ராசயோக மவனனுபவிப்பனாமே 5

உரைத்திடுநாலுபேறு முருபலவான்களாகில்
சரித்திரமேதென்றுபோ சற்குணமாதேகேளாய்க்

கருத்தினால் சிவனைப்பூசைக் கையினால்பண்ணும்
பாக்கியம்
பருத்திடுமோரணமாகும் பரியந்தம்பலனைச்சொல்லே 6

ஐயந்தானத்துமிக்கா யந்தணன்பார்த்துநின்றால்
துய்யராஜாக்கள்புத்தித் தொன்றிடுமவர்களாவான்
பையவேசெவ்வாய்ப்பார்க்கில் பலித்திடும்பூமிலாபந்
தையலேபுந்திபார்க்கில் சார்ந்திடுந்தனவானாமே 7

அப்பன்தானத்திற்சுங்க னறிவொடுபார்த்துநின்றால்
செப்பமாயனேகமாகச் சேர்ந்திடுமெசமானாவான்
இப்படிமதியோன்பார்க்கயியல்பொடுசுகவானாவான்
பெப்புரானுடனேநீண்டுப் பெருந்தனவானும்நீலன் 8

குருகதிர்மதியன்றானுங் கூடிவித்தானம்பார்த்தால்
பரிபசுத்திரவியங்கள் பெருகிடுவித்துவானும்
வருகதிர்வியாழஞ்செவ்வாய்ப் பார்த்திடவாகனங்கள்
பெருகிடரத்தினங்கள் பெரும்படைக்கெசமானா
வான்

சூரியன்புதனுங்கூடிச் சுகமோட்சத்தானம்பார்க்கக்
காரியவினோதவித்தைக் கனவித்தைக்கதிபனாவான்
சீரியவியாழன்சுங்கன் திகழ்கதிரவனும்பார்க்கக்
கூரியஅதிகவித்து வானெனக்கூறலாமே 10

மந்தனுதித்தன்பார்க்க வருகுணனல்லபுத்திச்
சொந்தமாங்கிரகமாதி பதியெனச்சொல்லவேண்டுஞ்
சந்திரவியாழன்செவ்வாய் சதிரொடுபார்த்துநின்றால்
இந்திரன்சுகவான்பெண்க ளின்பமேயிணங்கு
வானும் 11

சந்திரன்புந்திபார்க்கத் தழுவலைமெத்தைகட்டில்
வந்திடும்வீட்டுப்பெண்டீர் தன்னொடுவணங்கமாவான்
சுந்தரச்சுங்கன்திங்கள் சுகமொடுபார்க்கச்சூரன்
செந்திருவலையமாதே திரவியந்தேடச்சேரும் 12

மின்னியகதிரோன்செவ்வாய் மதியுடன்விரும்பிப்
பார்க்க
அன்னியதேசவாழ்வு வறிவுநல்லுத்ரவாதிப்
பொன்னனும்புதனுஞ்சுங்கன் தானுமேபொருந்திப்
பார்க்க
மன்னவனறியவித்து வானெனவகுக்கலாமே 13

திருந்தவேகிரகமெல்லாஞ் சிருடன்பாக்கியத்தைப்
பொருந்தவேபார்க்காராஜா பொன்திரவியத்தா
னென்ன
வருந்தியசுபரொன்பானில் வந்திடாராஜமானன்
இருந்துங்கிரகமெல்லாம் பாக்கியமேகாராஜன் 14

சந்திரன்தந்தைதானந் தரித்திடச்சனியும்புந்தி
விந்தையால்நோக்கமிக்காய் விளங்குபூபதியாமென்க
அந்தத்தானத்திலுச்ச மாட்கியாய்க்கிரகமண்ட
முந்தவேசுபரேபார்க்க முதல்வனும்ராஜாவாவான் 15

சூரியன்திங்கள்தானுந் தொடர்ந்துபாக்கியத்திலேறக்
காரியமதிலேவீரன் கண்ணில்நோக்காடுண்டென்கச்
சீரியசெவ்வாயேறிற் செப்பக்கேள்தூக்கியாவான்
தேரில்வான்கதிரோன்கூடிற் சேரராஜப்பிரியவானும் 16

திங்கள்சூரியன்வர்க்கத்தில் சேர்ந்திடத்திரளாய்க் கோட்கள்
பொங்கமாயேழிலேறப் பொருந்தியதுக்கியாவான்
அங்கவருடனேபொன்ன னழுந்திடவையன்வாஞ்சைச்
சங்கையாய்ப்பிறந்தோன்தானே திரவியம்சமர்த்தாய்த் தேடும் 17

சேய்கதிர்திங்களோடு கூடியேநவத்தில்சேர்ந்தால்
தாய்தகப்பனுமோயில்லை யென்னவுஞ்சாற்றலாமே
தூய்கதிர்மதியோன்புந்திச் சுககுருநவத்திற்றேன்ற
ஆயவுஞ்சுகவானப்பா லானைவாகனமுமாமே 18

புகர்பதிகதிரோன்கூடி நவமதில்பொருந்திநின்றல்
சுகஸ்திரியுடனேசண்டைத் தொடங்கியமனத்தனு வான்

பகலவனிலன்திங்கள் பதியவெள்ளாட்டியோடு
இகலொடுவினோதமாக யிருப்பவனென்றுகூறே 19

திருந்தியசெவ்வாய்ப்புந்தி கதிரொடுநவத்தில்சேர்ந்
தால்
பொருந்தியசுகவானாகப் புவிதனிலிருந்துவாழ்வான்
அருந்தவர்வியாழமேற வத்தனுக்கதிகவாசை
இருந்தநல்லறமுநன்று யியல்பொடுவிவரத்துண்
டாம் 20

ஆதித்தன்செவ்வாய்சுங்க னைபாக்கியத்திலேற
வாதித்தவிவாதனாகும் வாழ்ந்திடுங்கோபியல்லால்
சூதொத்தமுலையாட்பெண்டீர் தன்னையுந்துடிக்கநல்
லான்
வேதித்தசனியால்வெந்து விநோதமாந்தந்தைசா
வான் 21

அந்தணன்புந்திவெய்யோ னன்புடனவத்திலானால்
மந்திரிராஜமானன் வருதிரவியவானென்ன
விந்தையாய்ச்சனியொன்றானில் மேவிடப்பாவியல்
லாற்
சொந்தமாம்வேசைக்காசை மோகனுமென்றுசொல்
லெ 22

சுங்கனுதித்தன்பொன்னன் சுகமொடுநவத்தில்
தோன்ற
வங்கணப்பரத்தைமோகன் மருத்துவான்திரவியத்தன்
சங்கையாற்சனிவியாழன் சதிரொடுசார்ந்தாற்கல்விப்
பொங்கமாய்வெய்யோன்சுங்கன் போரராசாத்தெண்
டிப்பான் 23

சந்திரன்செவ்வாய்ப்புந்தி தன்னொடுதந்தைதானம்
வந்திடப்பிறந்தபிள்ளை மனதுசஞ்சலவானுமே
அந்தணன்வெவ்வாய்த்திங்க ளாகவேதெய்வந்தன்
பன்
சுந்திரமதிசேய்சுங்கன் தொன்றனற்பெண்டாள்துஞ்
சம் 24

சந்திரன்சனியன் செவ்வாய்ச் சதிரொடுபாக்கியத்தில்
வந்திடப்புத்ரதோஷ வகையினுற்றுயார்சாவாம்
அந்தணன் செவ்வாய்ப்புந்தி யவர்க்ளும்நவத்தி
லானல்
விந்தைசேர்குருவாய்மிக்க விளங்கவேதனவானுமே 25

சுந்தரச்சுங்கன்புந்தி மதியோடுநவத்தில்தோன்றத்
தந்தையானவனுக்கன்பாய்த் தாரமேயிரண்டா
மென்னப்

புந்திசந்திரனுமந்தன் புகழும்பாக்கியத்திலேற
அந்திறப்பாவியாவா னல்லதுவிவாதனுமே 26

மதியோடுகுருவுஞ்சுங்கன் மருவியேநவத்தில்வாழ்ந்
தாற்
சதிரனும்ராஜாவாவான் தப்பிதமில்லைமின்னே
கதிரொடுநீலனன்றுய்க் கலந்துபாக்கியத்தில்கண்டால்
அதிகமாம்நித்தியகன்மா னுஷ்டானமவன்செய்
வானே 27

மந்தனுஞ்சுங்கன்புந்தி மருவிப்பாக்கியத்தில்வாழ
மந்திரியாவான்பூமி பலிதமாம்வளர்நெல்கோட்டை
அந்தணன்திங்கள்செவ்வா யாகசாத்திரியாளாவன்
புந்திபொன்தனவான்வித்து வான்புகழாசாரன்
தான் 28

குருபுகர்மதிமால்கூடிக் குணமொடுபாக்கியத்தில்
வருபொழுதுவனேதர்ம ராஜனும்வணங்கலாமே
எரிகதிர்சனிசேய்நல்ல னிரவரியனிவர்களானுல்
தைரியன்சூரன்மிக்கான் சாதகன்கனவான்வீரன் 29

சேய்கதிர்புகர்விழாழன் திரண்டுபாக்கியத்திலானுல்
ஆயநல்குணமுமிக்கா யழகுடனமர்ந்துவாழ்வான்

தூயவரஞ்சுநாலு மூன்றுகோள்கூடத்தோன்ற
பாயவன்ராசாகீர்த்திப் பரிவொடுமவன்பண்
பானே 30

குருபுதன்பாக்கியத்தில் கூறிடாதிருக்கவல்லால்
ஒருவனுகிலுமத்தான முண்மையாய்ப்பாராணுகில்
வருகிணம்வியாதிகாந்தி யில்லையாமனிதர்க்கெல்லாம்
தெருவிலேயெறிந்துபோட்ட கல்லெனத்தெரிந்து
பாரே 31

பாக்கியத்ததிபனுறில் பன்னிரண்டெட்டிலாகத்
தீர்க்கசத்துருநீசக்கோள் திருட்டியாய்ப்பார்க்கப்
பட்டால்
போக்கிடும்பொல்லாவங்சம் பொருந்தியேநீசாசித்
தாக்கிடப்பிறந்தபிள்ளைச் சற்றும்பாக்கியமேயில்
லான் 32

நவமதுக்குக்குடையானேடு நற்சுபர்கூடப்பார்க்கத்
தவமொடுநற்கோள்தானுஞ் சார்ந்திடப்பார்த்து
நின்றால்
சிவகுருபத்திகீர்த்தித் திரவியன்பாக்கியத்தான்
நவமதில்மால்பொன்கூடி நாடவைஸ்வரியவானும் 33

பாக்கியத்ததிபன்சிங் காம்சம்பரிவாயேறத்
தீர்க்கமாய்லக்கினதன் திருட்டியாய்ப்பார்க்கவல்லான்
ஆக்கமாய்க்கருமநாத னறிவுடனுனும்பார்த்தால்
ஊக்கமாய்மகாதானங்கள் செய்குவானுண்மை
தானே 34

நவமதுக்குடையோன்கோபு ராங்குசநன்றுயேறத்
தவமிருங்கர்மநாதன் தயையிடுலக்குநாதன்
இவர்களாற்பார்க்கநல்ல வெழில்குலத்ததிலேவந்து
அவனியில்புரோகுதங்கள் தானமும் பொருந்தச்
செய்வான் 35

குருநவமீதில்வாழ வன்னவர்க்குளனவாம்சத்
தருகணிச்சுபர்கள்பார்க்க வையனுக்கன்பனுவான்
வருசுபனவத்திற்பொன்னன் வர்க்கமாய்நவத்திற்
உருகவேகுருநவாங்ச மூறிடக்குருவினன்பான் 36

புந்திசுககிரன்வியாழன் பொருந்தியநவத்திற்போக
அந்தபாக்கியத்தினாத னறிவொடுபார்க்கநல்லன்
விந்தையாற்சுபக்கிரகங்கள் மத்தியில்விளங்கவன்
னேன்
அந்தநாள்முதலாய்த்தர்ம வானெனமகிழ்ந்துவாழ்
வான் 37

பாக்கியத்ததிலேபாவர் பதிந்திடப்பாக்கியத்தோன்
தீர்க்கமாய்ப்பாவரோடு சேர்ந்திடத்திரிந்துவாழும்
ஆக்கமாய்ப்பாவக்ஷ்டி யங்கிசமேறியாண்டால்
வாக்கினிற்றீயசொல்லும் வருதனமில்லாவாழ்வான் 38

நவமதிற்குடைகோள னற்பலவானுய்நண்ணத்
தவமிகுகேந்திரகோணந் தன்னிலேயிருந்துவாழ
இவரலாற்சன்மக்கோட்க ளியல்புலக்கினத்தைப்
பார்க்கத்
தவசியாய்ஞானியாகித் தவங்களாய்த்தன்மவானும் 39

பாக்கியத்ததிலேயெல்லாக் கிரகமும்பதிந்துவாழ
ஆக்கமாந்திரவியம்பொன் னனேகமேயுண்டாமென்ன
தீர்க்கமாய்நவத்தோன்வெய்யோன் திருந்தவாறெட்டீ
ராறில்
லூக்கமாய்ப்பாவர்பார்க்கத் தந்தைக்கேவுதவானென்
றே 40

கதிரவன்பாக்கியத்துக் கதிபனுங்*கறுத்தனோடும்
பதியவேகேந்திரகோணம் பதியுடனிருந்துவாழ்வான்

---

* கறுத்தன்—சனி.

இதுவலாலஞ்சொன்பானி லெழிற்சுபரிருக்கப்பார்க்க
அதிசயமாகத்தந்தை யனித்தியமுகத்துக்காவான் 41

அம்புலிசுங்கனுனுக் கடைவாய்ராசியிலிருக்க
நம்பியாறெட்டீராறி ஞடியேயிருந்துவாழ்ந்தால்
நம்பியைப்பெற்றுத்தந்தை தரணியிலிருந்துவாழ்நாள்
வெம்பியேயெமகண்டங்கள் விளைந்திடமரணமா
வான் 41

பாக்கியத்ததிபனோந்திற் பதியகேந்திரத்திரிகோணந்
தாக்கிடச்சுபருங்கூடச் சார்ந்திடவல்லாற்பார்க்க
ஆக்கமாந்தகப்பன்வாழ்வ னந்தியமரணகாலம்
போக்கிடும்பதற்காலத்தி லென்பதைப்பொருந்தப்
பாரே 43

நவமதுக்குடையகோள னற்பலனுகவாழ
அவருடன்சுபருங்கூட வல்லதுசுபரேபார்க்கத்
தவஞ்செபஞ்சமாதியான சாத்தியதியானமெல்லாம்
இவனிடவாகவாழு மென்றனர்நூல்வல்லோரே 44

பத்திஞக்குடையோனுனும் பாக்கியத்ததிபனுனும்
மத்தியதேவலோக மங்கிசமருவிவாழப்

புத்தியாம்புதனுநன்றாய்ப் பொருந்தியபராவதாம்சம்
ஒத்துடன்வேதாந்தங்கள் தன்னையேவிளங்கப்பார்ப்
பான் 45

பாக்கியத்ததிபனோடே பரிவுடன்வியாழங்கூட
வாக்குடன்பராவதாம்சம் மருவியேயேறிவாழ
லக்கலக்கினத்துக்கோளை யுண்மையாய்வியாழம்
பார்க்க
ஆக்கமாம்மகாதானங்க ளவனளித்திடுவானென்றே 46

ஒன்பதாம்பாவகம் முற்றுப்பெற்றது.

பத்தாம்பாவகம்.

பத்தினின்பலன்வியாபாரஞ் சிவனம்பதிந்தகீர்த்தி
வித்தையாக்கினைவெளாண்மை மிகுந்தவாகமஞானங்
கள்
நித்திரைக்கன்மமான பூஷணநிதியோடெல்லாம்
கொத்தவன்கதிர்மால்நீலன் குருவையும்பேணிப்
பாரே 1

முந்தினசொன்னசேதி மொழிவதுபத்தில்பார்க்க
வந்திடுங்கர்மக்கோளன் வருபலவீனமாகச்
சிந்தைசஞ்சலவானுகுஞ் செய்தொழில்துராசாரங்கள்
சொந்தமாயவனிடத்திற் றென்றிடும்வகையைச்
சொல்லே 2

குருபகர்கதிர்மாலின்னோர் குணபலவீனமாக
ஒருபனிரண்டிலாறி லெட்டினிலூறிநின்றால்
வருவதுபொல்லாக்கன்மம் வணங்குவன்பத்தில்ராகு
எரிகதிர்கூடக்காசி யாத்திரையிவனேபோவான் 3

மீனமாய்த்தானம்பத்தாய் விளங்கிடுமதியாய்மோட்
சம்
தானவன்சுங்கனோடுங் கூடியேவுச்சஞ்சார்ந்து
ஆனகேந்திரத்திலேற வவன்கங்காத்தானமாடப்
போனவனென்றுபிள்ளைப் பூமியில்வருநாள்பேசே 4

வியமதில்மாலாயந்த வியப்தியுச்சம்வீழ்ந்து
நயமுடன்புதனைப்பார்க்க நல்லபுண்ணியங்கள்
செய்வான்
தயவொடுபத்தில்பூர்ணச் சந்திரனிருந்துவாழ்ந்தால்
அயனிட்டவதிகாரத்தா லவனுங்காசிக்கேபோவான் 5

பாவர்கள்பலவானுகப் பத்தினிற்சாகசங்கள்
கீவர்கள்பலவீனங்கள் திருந்தநற்கருமஞ்செய்வான்
கோவமில்பத்திற்கோளன் குருபுதனிவரைக்கொண்டு
ஆவதேயாகங்கன்ம மழிக்கச்சிந்திக்கலாமே 6

பத்தினுக்குடையோன்லக்கு நாதனும்பதிந்தேகாதி
பத்தியமாகத்தானே பணமுண்டாய்ப்பண்ணும்யாகம்
ஒத்தகன்மத்தோன்லக்கு நாதனுமொளிவாய்வெய்
யோன்
முத்தவேளாண்மைபொன்னல் யாகங்கள் முடிப்ப
னென்றே 7

பத்திரமாகவிக்கோள் பதிந்திடவரவுந்தீண்டக்
குத்திரத்தொழிலின்பொன்னுற் கொண்டவன்யாகம்
பண்ணும்
உத்தமவியாழங்கூடி லுயர்ந்தராசாக்கள்கையால்
மெத்தவேதிரவியங்கள் வேண்டியேயாகஞ்செய்
வான் 8

பத்தினுக்குடையோனேழின் பதியனுமொன்றாய்க்
கூடிச்
சொத்திரிதிரவியத்தாற் சுகமொடுயாகந்துய்ப்பான்

வித்தகன்புந்திசுங்கன் விளக்கியராசிக்கன்னேன்
ஒத்துடனேக்கயாக முண்டெனவாசியோகம் 9

சந்திரன்றனக்குப்பத்தா மிடஞ்சுபர்சதிராய்வாழ
உந்தியுச்சவர்க்க னுண்டெனவியாழங்கூடச்
சிந்தையால்வியாழம்பார்க்கச் செய்பவன்யாகமெல்
லாம்
வந்தவனென்னக்கீர்த்தி வளர்ந்திடமகிமைவானும் 10

புதன்குருசுங்கனிந்தீப் புண்ணியரிருக்கும்ராசி
அதிபனெட்டிராறுறி லாய்விடநல்லகன்மம்
விதமுடன்பண்ணியந்த விதங்களாய்க்கீர்த்தியாகிப்
பதியும்லட்சுமியாளன்னம் பாரிசம்படருவானே 11

குருபுதன்பத்திற்கோளன் கூடியேபல்வானுக
சருவுடன்யாகமான சற்கருமமுழுதுமுய்ப்பான்
இருவருந்தானக்கோள னிவர்களிற்சுபராய்ப்பார்க்க
வருவதேயதிகயாகம் வகையினில்வாசியோகம் 12

கன்மத்தான்சுபராய்க்கன்மங் கண்டிடப்புதனுங்கூட
வன்மத்தால்ராகுதானும் மருவிடக்கூடிவாழ்ந்தால்
தன்மத்தாற்பழையகோவிற் கோபுரந்தண்ணீர்ப்பந்தல்
இன்மத்தாலழிதோப்பெல்லா மாக்கமாயின்ல்வாய
யாகம் 13

புதனுச்சமாகிக்கேதுந் தன்னொடுபொருந்தவல்லாய்
இதமுடன்வந்தோன்கூட யிணங்கிடப்பத்தின்கோனும்
பதமுடனிவர்கள்கூடிப் பதிந்திடப்பிறந்தபிள்ளை
விதம்விதமானயாகம் யாவையும்விளைப்பானமே 14

அதியுச்சமமாகப்பத்துக் கதிபனோடழகாய்ப்புந்தி
மதியுடனேழிற்கூடி வாழநிச்சயமாயாகன்
புதனுடன்ராகுகூடிப் பொருந்தியேபத்திலானல்
இதமுடனல்லகன்ம மினங்கிடான்தூஷிப்பானே 15

பத்தினுக்குடையோனுதி வெட்டினிற்பன்னிரண்டில்
முத்திடவிரோதகன்ம மொழியவுமென்னலாகும்
உத்தமபத்துக்கோள னுடன்புதன்ராகுகூடில்
ஒத்திடக்கன்மத்தேக வுயர்ந்தயாகமுஞ்செய்வானே16

நவமதிற்பத்திற்கோள னுடிடப்பாக்கியத்தோன்
தவகுருலக்கினதன் றன்னொடுகன்மக்கோளும்
இவர்களும்பலவானக விருந்திடக்குணவான்தன்மன்
பவமிலாசாரகன்மம் விதியொடும்பண்ணுவானே 17

பாக்கியத்தானமேழும் பத்துடனஞ்சுலக்கினம்
ஆக்கமாமிந்தராசித் தனில்சுபரிருக்கப்பார்க்க

வாக்கொடுமந்தராசிக் குடையவன்பலமாய்வாழ்ந்தால்
தீர்க்கமாய்ச்சகலதத்து வங்களுஞ்சிக்கான்யாகன் 18

பாக்கியத்ததிபன்பத்துக் குடையவன்லக்கினாதன்
ஊக்கமாம்வியாழம்புந்தி யுடைதிசையபகாரத்தில்
ஊக்கமாய்சற்கன்மங்க ளாசாரம்ஞானயாகம்
தீர்க்கமாய்வித்தையெல்லா மிட்டமாய்லபிக்குந்
தானே 19

சந்திரன்றனக்குமூன்றுந் தானமேசராசிக்கு
எந்ததன்மங்களாலே விசித்ததுவிழுந்துபோனல்
அந்தசத்திரங்கடன்னை யன்புடன்புதிதாய்க்கட்டி
வந்தபேர்தனக்குவேண்டும் பொருளாலாமனதாய்ச்
செய்வான் 20

பத்தினுக்குடையோன்கோபு ராங்கிசம்பதிவாயேற
மெத்தநற்குளமும்வாவி கிணறுடன்வெட்டிவைப்பான்
ஒத்தநற்கன்மத்தான முயர்நவராசிக்கோட்கள்
மத்தரும்பலமாயாறு சாத்திரம்வகையாய்ச்சொல்
வான் 21

ஐந்துகோள்நாலுகோட்க ளமர்ந்தொன்றாய்க்கூடிக்
உந்திடத்திரிகோணத்தி னுயர்பலனுகிவாழ்ந்தால்

புந்திசந்திரன்வியாழம் புகர்கதிர்சேய்பெலக்கில்
சந்தனவானப்பிரத்த னல்லதுதவசியாவான் 22

ஒருத்திடுஞ்சாதகற்கு வுறுபலன்சொன்னதல்லால்
விருத்தனுப்பலைகள்தன்னில் விரும்புவான்குகைசஞ்
சாரம்
தரித்துலோகத்திற்பிட்சை சந்நியாசியோகதண்டிப்
பெருத்தஞானங்கள்மர்மம் பெரியவன்ராசபோகன் 23

பத்தினில்மூன்றுகோட்கள் பரிவுடனுச்சவர்க்கம்
ஒத்திடக்கன்மக்கோட்க ளுயர்பலமாய்ச்சந்நியாசி
ஒத்தபத்ததிபனுக்கே வுயர்பலவீனமானுர்
சத்துமாசாரமில்லா னென்னவுஞ்சாற்றலாமே 24

ஆக்கமாய்ப்பத்தின்கோ னருபலவீனமாகில்
வாக்கினுக்குடையோனேழின் மன்னவனிவர்களோடுந்
தாக்கிடச்சந்நியாசித்தான் தப்பிதமில்லையின்னோர்
பாக்கியத்திரியாம்கைம்பெண் தன்னொடும்பரிவாய்க்
கூடும் 25

சூரியன்சனிசெவ்வாயுந் தொடரவேயிரண்டின்
கோளும்
காரியவைந்தினுதன் றன்னொடுங்கலந்துநின்றால்

வீரியந்தன்னைநீக்கி வெறுத்துச்சந்நியாசியாவான்
சீரியத்திரியாம்கைம்பெண் தன்னையுந்தீண்டானென்
னே 26

ஆதித்தன்சுபர்களம்ச மாயுச்சவர்க்கமாகிப்
பேதித்தகிரகமெல்லாம் பின்னைநிம்கதிரைப்பார்த்தால்
சாதித்தவாலிபத்திற் சந்நியாசியாகச்சார்ந்துப்
போதித்தஞானயோகம் பொருந்துப்புண்ணியவானு
மே 27

சுக்கிரசந்திரனும்லக்கு நாதனைத்தொடர்ந்துபார்த்
தால்
முக்கியசந்நியாசிபிட்சை திரவியம்விரும்பானில்லை
மிக்கவருச்சபாக மிருந்திடமதியால்பார்க்கத்
தக்கசந்நியாசியாவா னன்றியுந்தனவானுமே 28

சொன்னவிம்மூன்றுகோளுங் கூடியேசுகமாய்வாழ
துன்னவர்தன்னைமெத்தக் கிரகமுமடைவாய்ப்பார்க்
கத்
தன்னவர்த்திசையபகாரந் தன்னில்சந்நியாசியாவான்
என்னவேயுரைத்தார்நூலோ ரியல்பினுல்செப்ப
லாமே 29

சந்திரன்மந்தனின்னோர் சார்ந்திடும்ராசிதன்னை
பந்தலக்கினத்தினாதன் பார்க்கத்தீட்சதனுமன்னோ
மந்தன்திரேகாணராசி மண்மகனிருக்குமோரை
அந்தத்தானத்தைக்காரியம் புலிபார்க்கச்சந்நியாசி 30

குருசனிசெவ்வாயின்னோர் கூடிடும்ராசிதன்னைப்
பரிவுடனீலன்பார்க்க வல்லதுபரிந்துகூட
வருநவயூதிற்பொன்னன் வந்திடராசியல்லாற்
பெரியசந்நியாசியாவா னென்னநாம்பேசலாமே 31

மதிநவமீதில்வாழ மாந்தியாங்கிரகப்பார்வை
அதிசயராசயோக மாகியேகோட்கள்வாழ்ந்தால்
விதியோடுகன்மஞ்செய்து விளைந்ததீட்சதனுமென்ன
இதுவலால்ராசாவாவா னென்பதைவெளியாய்ச்
சொன்னேன் 32

சந்திரன்வியாழம்லக்கினந் தன்னைத்தான்சனிதான்
பார்க்க
சொந்தமாயொன்பான்மீதிற் றோன்றிடுங்குருவே
யானால்
விந்தையால்ராசயோகம் விளங்கியராசாவல்லால்
வந்தசந்நியாசியாகி மனைதொறும்பிட்சையேற்பான் 33

நவமதினீலன்வந்து நாடிடமற்றக்கோட்கள்
தவமொடுவன்னேன்றன்னைச் சதியிலாநோக்கமின்றிப்
பவமாவிராசயோகம் பதியுந்தீட்சதனுப்பாராய்
சிவன்செயலெவர்க்கானுலுந் தெரியுமேசின்னைநோ
வான் 34

பத்திநுக்குடையோனுலு பேருடன்பரிவாய்கூடி
உத்தகேந்திரத்திரிகோண மீதிலேவுலாவிநின்றால்
பெத்தசாதகன்சந்நியாசிப் பெருமையால்மோட்சனு
வான்
ஒத்தகன்மத்தில்நாலு கோளுறில்முனியாமன்னே 35

சனியன்லக்கினத்துநாதன் சதிரொடுமவனைப்பார்க்
கப்
புனிதமாய்க்கோட்களெல்லாம் பொருந்தவேபாராதா
கில்
இனியகன்மத்திலக்கு நாதன்ருனிருக்கவல்லாற்
றனியனுப்பத்தின்கோளன் வரச்சந்நியாசியாமே 36

சந்திரன்றன்னைநீலன் சதிரொடுபார்க்கமந்தன்
உந்துந்திரேகாணமாக வோடச்சந்நியாசியாவான்
வந்தகன்மத்திலேடு யாந்தியும்ராகுகூடில்
விந்லதயாங்கொடுரவஞ்ச மேவச்சந்நியாசியாவான் 37

மாந்தி-என்பது குளிகன்.

சீவனம்.

கன்மத்தானீசாத்த மனங்களாய்க்கண்டிநிற்ம
வன்மத்காற்பத்திற்செவ்வா யாவதுமந்தன்வாழச்
சென்மச்சாகரனய்வந்தோன் செகத்திற்சந்நியாசியாகி
இன்பத்தாற்சுரபாணங்க ளியல்புடன்செய்
வானன்றே 38

பநிந்தசிவனங்களெல்லாம் பகலவன்முதலாய்த்தந்தை
இதந்திரிசகோதரங்க ளியல்புடன்தாயாரக்காள்
மதந்தனும்லக்கினத்தை மதியொடுபத்திற்கோளன்
முதிர்ந்தவங்கிசங்கள்பற்றி முடிந்தசிவனங்கள்
சொல்லே 39

கன்மத்தானத்தினதன் கதிர்நவாங்கிசத்திலேறத்
தன்குணத்திருகுதாளஞ் சமுத்திரவியாபாரத்தில்
பொன்திரவியங்கள்முத்துப் பொருந்தியதுகில்வியா
பாரம்
இன்புறுசிநேகன்தூது யிதுகள்சிவனமாய்வாழ்
வான் 40

சந்திரனவாங்கிசத்திற் சதிரொடுபத்தின்கோளன்
வந்திடச்சிலதுற்பத்தி யால்வரும்பதார்த்தத்தாலு
மிந்தவெள்ளாண்மைமண்ணால் வினைத்தின்விவரத்
தாலும்
தந்தராசாக்கள்பெண்டீர் தமையனுஞ்சரித்துச்
சிவன் 41

பத்தினுக்குடையோன்செவ்வாய் நவாங்செம்பரிந்து
வாழ்ந்தால்
சத்தியாய்ப்பூமியாலே சண்டையின்விவரத்தாலும்
அந்தமில்ருணத்தானங்கி வாதத்தால்களவினாலும்
மெத்தவேகலகத்தாலும் விளங்குஞ்சாகசத்தால்
சிவன் 42

புதனவாங்கிசதத்திற்பத்துக் குடையவன்பொருந்தி
வாழ
விதமொடுசிற்பவித்தை விதியோடாகமங்களாலும்
மதமிகுகணக்கால்ஞான வேதத்தின்வகையானெய்
யால்
சுதந்தரச்சோதிடங்கள் சொல்லும்புரோகிதத்தாற்
சிவன் 43

குருநவாங்கிசத்திற்கன்மன் கூடவேபதினுல்தெய்வம்
திருவுளப்பொருட்டால்மிக்கச் சிவபுராணங்களாலும்
மருவுசாத்திரத்தால்வேத வகையாகமத்தால்தன்மம்
பெருமையாலுபதேசத்தாற் பேசுமார்க்கத்தாற்
சிவன் 44

வெள்ளியுநவாங்கிசத்தில் விளங்கிடப்பத்தின்
கோளன்
உள்ளதாய்ப்பொன்மாணிக்க முயர்கரிப்பரியாலிந்தக்
கள்ளவியாபாரங்கண்டு சர்க்கரைதயிர்வங்கத்தால்
பள்ளிகொளிலைதன்னுற் பெண்களின்பலத்தாற்
சிவன் 45

சனிநவாங்கிசத்திற்கன்மன் சர்ந்திடக்கபடமார்க்கத்
தினில்மரம்வெட்டிவிற்றுஞ் சினத்துடன்தட்டியாலும்
இனியநல்கணக்காயன்ய குண்ணியத்தியல்பாயாலும்
மனிதரைப்பெட்டிசெய்து வயிரத்தால்வாழுஞ்
சிவன் 46

ஒன்றுநான்கேழுபத்தி லுறபவர்நாடிவாழ்ந்தால்
மன்றினீசத்தொழிலின் வகையினுல்மூர்க்கத்தாலும்

நன்றெனப்பாத்தைதன்னை நயமொடுகமனம்பொன்னுல்
வென்றகுரூரத்தால்ராசப் பிரீதியில்விளங்குஞ்சிவன் 47

பத்திஞெருந்தோன்பத்தி னங்கிசம்பரிந்துவாழ்வோர்
உத்தமச்சுபாய்புன்ய வானெனவுலகிலோதும்
ஒத்தகன்மத்திற்பாவ ரூறியங்கிசமேயாஞல்
சத்துருற்கருமம்பண்ணுன் சகலகும்பவனேயென்பார் 48

சந்திரலக்கினத்துக்கிந்தச் சங்கைபாற்பலனேதென்னில்
முந்தியேயுரைத்ததானம் பலனையும்மொழிரென்ன
அந்தபந்தாமிராசி யங்கிசத்தநிபன்பாவர்
வந்ததுபாபியோடேமருவுமாபாவம்பண்ணும் 49

மதிதனக்கப்பாற்பத்தில் வருகதிர்செவ்வாய்வந்தால்
சதிரொடுபாபபுத்தி சாரசாகசமேபண்ணும்
அதிசயவியாழம்பார்க்க வமைத்திந்தப்போகமெல்லாம்
இதமுடன்துய்ப்பானென்ன வியல்பாகவறிந்துசொல்லே 50

அம்புலிதனக்குப்பத்தி லாதித்தன்செவ்வாயாகில்
வெம்பியமதத்தால்வேசைத் திரிகளைவிரும்பவல்லான்
நம்பியவழாழஞ்சுங்க னயமோட்சத்தானஞ்சேரில்
தம்பிபோபிரியன்பெண்டீர் திரவியந்தனியேசாரும் 51

திங்களுக்கப்பாற்பத்தில் சேய்புதன்திரிந்துவாழ
அங்கவாயுதங்கள்தொட்டுச் சேவகமதனுல்சிவன்
சுங்கன்சேய்கன்மத்தாறற் றெழிற்செய்வான்
படைக்குக்கர்த்தன்
சங்கையாஞ்சனிபத்தாறற் றரித்திரந்தனிலேவாழ்
வான் 52

சொல்லியபத்தில்ராகு சனிபுதன்தோன்றினின்றல்
அல்லியுமன்னல்போற்ற மாசர்கோனுகவாழும்
நல்புதன்சுங்கன்திங்கள் நாடியேபத்தில்நண்ண
இல்திரிதியும்வித்துவானெனநிலையுஞ்சொன்னேன் 53

பத்தினில்மந்தன்வந்து பரிவுடனிருந்துவாழ்ந்தால்
புத்தகமெழுதநோக்கப் புகழவிசவித்தைபூண்டான்
வித்தகனைவெள்ளி வியாழமும்விளங்கப்பத்தில்
உத்தபண்டிதனுய்ராசப் பிரியனுயுலகில்வாழ்வான் 54

குருமதிநீலனென்றுக் கூடியேபத்திலேற
வருபவன்சுகந்தநீல வர்ணச்சூரணத்தாற்செட்டி
எரிகதிர்கன்மத்தேகி யிடர்படுஞ்சனங்கள்சாடித்
தெரிவதுகொஞ்சநெஞ்சந் தெளிந்தவனென்னுஞ்
சிவன் 55

பத்தினுக்குடையோன்வாழ்ந்து பதிந்திடுமோரை
நன்றாய்
உத்தமாஞ்சுபராயன்னோ ருடன்சுபர்கூடிவாழ்நாள்
மத்தநல்சுபரேபார்க்க வரில்சுபராங்சமேற
இத்தனையொத்தால்லாக்கி னைக்கிவனெசமானவான்56

கன்மத்தானத்தானந்தக் காரியனுடனேகூட
வன்மத்தாலட்டமாதி பதியிவனவனைப்பார்க்க
அன்பற்றக்கொடூர்கொடூர வங்கிசமேறக்கேந்திரம்
சென்மத்தாலதிகவாக்கினைச் செய்திடத்தேகவானும்57

சந்திரன்கடகந்தன்னில் சார்ந்திடச்சதிராய்ச்சுங்கன்
அந்தணனிவர்கள்யாரு மழகுடன்மதியைப்பார்க்க
வந்தபாராவதாங்ச மனதொடுமேறிவாழ்ந்தால்
முந்தவேதிரவியங்கள் முற்றிடுங்கிரத்தியாவான் 58

பத்தினுக்குடையோனல்ல பரிசுபருடனேயல்லால்
உத்தநல்சுபர்தன்மத்தி யத்திலேயூறிவாழ
மெத்தநல்சுபாங்கிசங்கள் மேவவேகீர்த்திமானுய்
வைத்தவமானிகர்த்த னென்னவேவிளங்கும்லோகம்59

கன்மத்தானத்திற்பாபர் கலந்திடப்பாபர்பார்க்க
நன்பத்தாமிடத்திற்கோள னற்பலவீனமாக
அன்பத்தாலல்லாற்றுன மாகுன்தான்கன்மவீட்டான்
இன்பறுகாந்திகீர்த்தி யில்லையாமென்றுசொல்லே 60

திருந்தியசெவ்வாயன்னேன் தன்னையேதிரும்பிப்
பார்த்தோன்
பொருந்தியபலவானுகிப் புதன்திரிகோணகேந்திரம்
வருந்திடப்பத்தின்கோளே மதியுஞ்சுக்கிரனும்பார்க்க
வருத்தமிலாண்மைலாபம் வாடுமாடுடனேசீவன் 61

பத்திலுக்குடையோனெந்த நவாங்கிசம்பதியுறுனே
உத்தமநவாங்கிசத்துக் குடையவன்சனிசம்பந்தச்
சத்துருத்தானநாதன் சார்ந்திடவல்லார்பார்க்க
மெத்தவெள்ளாட்டியார்க ளடிமையுமிகவுண்டாமே62

பத்தாம்பாவகம் முற்றுப்பெற்றது.

பதினோராம்பாவகம்.

சொல்லியலாபமந்த ராசியிற்றோன் றுங்கோளை
நல்லவெய்யோன்தாயாதி நவமிருதாயார்வர்க்கம்
வல்லசேய்பிறப்புப்புந்தி வம்மான்வழிவர்க்கத்தாலும்
மெல்லவேபலமாய்லாபந் திரவியவிதங்கள்சொல்லே 1

அந்தணன்லாபமீதி லணைந்திடபாகாசாரம்
வந்திடும்வேதசாத்திர வகைதிரவியமுஞ்சேயாம்
சுந்தரச்சுங்கன்லாபந் தோன்றிடவலங்காரங்கள்
விந்தைநாடகசங்கீதம் வித்தைகாரியமாய்மார்க்கம் 2

காரிலாபத்திற்றோன்றக் காணும்வெள்ளாண்மை
தான்யம்
வரிவெள்ளாட்டிபண்ணும் பறையுடன்முகந்து
சொல்ல
சிரியசுபர்லாபத்திற் றிரவியஞ்சிராய்த்தேடுங்
கூரியபாபர்லாபங் கொண்டுடன்தேடும்பொன்னே 3

பாவருஞ்சுபரும்லாப மீதிலேபதிந்துவாழ்ந்தால்
ஆவதேதிரவியங்க டானதர்மத்தாலாகும்
சிலமால்குருவும்லாபஞ் சேர்ந்திடவித்தைபுத்தி
தாவியேவந்துதன்தன் கிரிகையால்தனமுந்தேடும் 4

சொல்லியலாபமீதிற் ரேன்றியகிரகந்தன்னில்
மெல்லியலிட்டகோட்கள் விளங்கியபலத்தைப்
பார்த்து
நல்லசாதகற்குப்புத்தி நற்குணவாகனங்கள்
துல்லியமரணமட்டுந் திரியுடன்சுகத்தைச்சொல்லே 5

வாக்கினுக்குடையோன்லாப மன்னவன்லக்கினாதன்
ஆக்கமாயிட்டகோட்க ளமர்ந்திடத்திரவியலாபம்
பார்க்கநல்கன்பஃந்தெய்வப் பிராமணர்தமக்குப்பத்தி
போக்கிலேபாவம்போக பொருந்தவேதானஞ்செய்
வான் 6

சொன்னலாபத்திற் கோட்கள் தோன்றவேபலமோ
வீனம்
என்னீசப்பகைராசிக்குக் கிரகமாயெட்டீராறில்
முன்னவேயிருமூன்றாக்கு முதல்வனுஞ்சாதகற்கு
வன்னமேரேகையோக மாகவுந்தினமும்பிட்சை 7

இலோபத்தான்லாபமீது விருந்திடவியல்பாய்வெய்
யோன்
உலோபத்தால்மதியுங்கூடி யூறிடப்பலனேதென்னில்

சுலோபத்தாலரசரென்னச் சொல்லவுங்கூடுமற்றக்
கலாபத்தாலிராசாவெங்கே வெண்ணவுங்கணக்காய்த்
தேடும் 8

திருந்தியேசெவ்வாய்லாபஞ் சேரமந்திரிமாபுத்திப்
பொருந்தவேவிவசாயத்தில் போதவேபணமுந்தேடும்
மருந்தெனும்வியாழம்புந்தி வரலாபமீதில்வித்தை
வருந்தியவேந்துபுத்திரர் வணக்கமாசாரஞ்செய்வன் 9

குருவுடன்சுங்கன்கூடிக் குணமுடன்லாபங்கொண்
டால்
வருகவரத்தினம்யானை வல்வரிபசுக்களெல்லாந்
தருணநல்திரியுஞ்சாருஞ் சனிலாபந்தாண்டக்கண்டால்
அருளில்லாப்பொல்லாக்கன்ம மாகவேநடந்துகொள்
வான் 10

கேந்திரத்திரிகோணந்தன்னிற் கேதுடன்லாபக்கோட்
கள்
சார்ந்திடலாபமீதிற் றருபவரிக்கையின்னோர்
வாழ்ந்திடுமுச்சவர்க்கம் வரிற்றிரவியமேலாபம்
சேர்ந்தகாரகர்பலமானூற் றிசைவரில்சேரும்பொன்
னே 11

பதினோராம் பாவகம் முற்றுப்பெற்றது.

பனிரண்டாம் பாவகம்.

வியமதுக்குடையநாதன் வியத்தையுஞ்சனியும்பார்க்கில்
நயமுடன்றாரதேச நட்புநன்றில்லாக்கீர்த்தித்
தயவுடன்தாதாவாகித் தாங்குவான்சயனந்தானும்
பயமுடன்றிரவியங்கள் பரிவுடன்செலவுசொல்லே 1

சொல்லியபன்னிரண்டிற் சுகர்சாரக்கிரகமாக
இல்சரராசியாக வீராறெட்டாறினுக்கு
நல்லவனதிலேவாழ நாடியசனியுங்கூட
அல்லலானீலன்பார்க்க வவன்தேசங்காட்டுக்கா
வான் 2

வியமதில்சுபரிருக வீரும்பியேசுபருங்கூட
நயமொடுசுபரேபார்க்க நாள்மூன்றிற்குடையகோளன்
பயில்பலவீனநீச ராசியிற்பதிந்துவாழ்ந்தால்
இயல்புறுந்திரவியங்க ளிருந்திடநாசமாமே 3

ஈராறுக்குடையகோள னிருப்பதுவியமேயானல்
தாராளப்பலவான்கூடச் சார்ந்திடப்பலமோவீனம்

சிராகத்திரவியங்கள் செலவிடான்சிலர்பாவர்
நோராகியிருக்குமாகி னிதிசமசெலவாகிற்கும் 4

வியமதிலிட்டகோட்கள் மிருசுபவர்க்கமானல்
தயவொடுதிரவியத்தைச் சதிரொடுசெலவேசெய்வான்
பயவரிட்டங்களானக் கிரகங்கள்பரிவாய்ப்பார்க்க
நயமிலாத்துன்மார்க்கங்கள் நாடியேசெலவாம்
பொன்னே 5

சொல்லியபன்னிரண்டிற் ரேன்றியகிரகத்துக்குள்
வல்லகாரகனுனும் வருபலவீனமானல்
நல்லசாதகற்குவன்னேர் நல்திசையபகாரத்தில்
மெல்லவேதிரவியங்கள் வெகுசெலவாகுமாமே 6

ஆறெட்டுக்குடையோன்பாப ராய்ப்பலமாறீராறில்
ஊறவெள்ளாண்மைதன்னு லுயர்திரவியங்கள்சேதம்
கூறியவியத்தினுலுங் கிரகங்கள்கூடமாடும்
நீறிடுமடியார்தாமு நிச்சயநாசமாமே 7

வியமதில்வேதக்கோட்கள் விளங்கிடமிருந்தாலென்ன
இயலோடுதிரிக்கிரகங்க ளிருந்திடவியத்திலெல்லாத்
தயவினுனற்கோள்பன்னி ரண்டினிற்சாதகற்கு
நயமிகுமன்னியருன்ய காரினுல்திரவியநாசம் 8

சொல்லியதானந்தன்னிற் சுபர்வரிற்றயாகியாவன்
நல்லுளவனவெள்ளாண்மை நன்மையாந்தன்மஞ்
செய்வான்
இல்லையால்வியத்திற்பாவ ரிருந்திடவிவாதக்காரன்
அல்லவெகிரகமாட்சி யாயுபகாரிகண்டாய் 9

சூரியன்மதிதான்பன்னி ரண்டினிற்றேன் றிநின்றால்
சிரியராசயோகஞ் சேருமேற்றிரவியநாசம்
காரிகைசெவ்வாய்திங்கள் கலந்துடனிருக்கப்பார்க்க
வீரியத்தானுநாநா விதத்திலுந்திரவியநாசம் 10

அந்தணன் றிங்கள்சுங்க னரிவொடிவியத்திலேல்றச்
சிந்தையாற்றேடும்பொன்னைத் திருந்தரட்சிப்பா
னென்ன
விந்தையால்வியத்திற்சுங்கன் மேவிடச்சுபருங்கூடச்
சந்தமாய்ச்சுபரும்பார்க்கச் சயனத்தில்சுக
வானன்றே 11

வியமதுக்குடையகோளன் மிகவச்சராசிக்கேகத்
தயவுடன்சுபர்கள்வர்க்கச் சார்ந்திடச்சுபரேபார்க்க
நயமொடுமால்பாலாழி னண்ணியசயனம்போல
இயல்புடன்சாதகற்கு யிணங்கியசயனவின்பம் 12

அதியுச்சபாகந்தன்னி லமர்ந்திடவியத்தானத்தோன்
பதிநன்றாய்தூங்குமஞ்சம் பதிந்திடச்சயனஞ்
செய்வான்
இதுவலாற்பாக்கியத்தோ னியல்புடனவனைப்பார்த்
தால்
அதுநவமணிகளாலே யானபூஷணமாமின்னே 13

இட்டமாச்சுங்கன்மந்தன் மதியொடுயிவறிலாறின்
அட்டமத்துக்கப்பாலே யாகியதிரிகோணந்தன்னில்
முட்டிடவந்தோர்க்கெல்லா மொழிவதேராசயோகம்
திட்டமாயிதனைப்பார்த்துத் திடம்படத்தேர்ந்து
சொல்லே 14

சுக்கிரன்பாபரோடுங் கூடியேவியத்திற்றேய்ந்தால்
பக்கமாய்த்திரியுந்தானும் பரிவுடன்சயனஞ்செய்வான்
மிக்கசேய்சுங்கனேடும் கூடியேவியத்தில் வீழ்ந்தால்
வர்க்கமும்பல்லிதானும் மறந்துமேல்விழுந்து
போமே 15

மந்தனும்ராகுமட்ட மாதிபன்வனிதமாக
வந்திடவியத்தானத்தில் மருவிடச்சாதகற்கு
மூந்தவேநாகலோக மென்னவேமொழியநல்ல
விந்தையாம்ரௌரவாதி நரகத்தில்விழுவான்
மின்னே 16

சத்துருத்தானக்கோளாய் தாண்டியேவியத்தானத்தில்
பத்திடப்பார்க்கவந்தப் படிநரகத்நில்பாய்வார்
சொற்றமிழாகவிந்தச் சூத்திரஞ்செகத்திற்றேன்ற
வித்தகன்வேதலிங்கப் பட்டராம்விளம்பலுற்றூர் 17

இரணியன்லக்கினத்தி லிருந்திடவேழிற்சுங்கன்
திரணமாய்க்கன்னிவீட்டிற் சேய்புதன்சென்மலக்கினம்
தரணியில்வீரர்கையிற் சாற்றியதனுமோட்சங்கள்
மரணமாஞ்சாதகற்கு வாய்திடுமரணமோட்சம் 18

பனிரண்டாம்பாவகம் முற்றுப்பெற்றது.

——:o:——

ஆ பாவகம் கஉ - க்கு மொத்தம் செய்யுள் 500.

ஜாதக பாரிசாதம்

முற்றுப்பெற்றது.

The Manoranjini Press, Sowcarpet, Madras.

இதுவரையும் வெளிவராத தமிழ்ப் புத்தகம்

நவக்கிரக ஸ்தோத்ரம்

பக்ஷிதீர்த்தம் என வழங்கும் திருக்கழுக்குன்றவாஸியும் ஆகம (நவக்கிரகமுதலியஸாந்தி) ஸாகித்ய கலாவல்லபர் ஜ்வாலாஸாந்த குருமூர்த்தி, ஷஷ்டிபூர்த்தி, தி. அ. சுப்பராய தேசிகர் எழுதியதாவென்று கவனித்து வாங்கவும்.

அநேகபடங்கள் பலசக்கரங்கள் அடங்கியது.

இதில் ஸ்தோத்திரங்கள வரலாறு 9 அஷ்டோத்திரங்கள் சனிபகவான் ஸகஸ்ர நாமம்; நாமாவளி நவக்கிரக பிரதக்ஷண விதி, ஆலயங்களில் நவக்கிரக பிரதக்ஷணவிதி தியானம் வரலாறு, மூலமந்திரம், முதலியவைகள் அடங்கியுள்ளது.

உயர்ந்த பயிண்டுடன் விலே அணா 8.

பெண்கள் ருதுவான மாத-திதி-வார-நக்ஷத்திர பலாபலன்களும் அதற்குரிய சாந்தியாதி கிரமங்களும் விலே அணா 3:

☞ ஜோதிடர்களுக்கு வேண்டிய எல்லாவிதமான ஜோதிட புத்தகங்களும் கிடைக்கும்.

ஏமாறவேண்டாம்! ஏமாறவேண்டாம்!!

உண்மையான புத்தகம் இது ஒன்றே!!!

கொக்கோகவைபவம்

என்னும்

மன்மதன் திருவிளையாடல்

சிற்றின்ப ரகஸ்யங்களைப் பச்சையாக எழுதியுள்ளது. இது முற்றும் ரகசியப் பிரசுரம் அசல் கொக்கோக சாஸ்திரம். வாத்ஸாயன காம ஸூத்ரம் ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதாசார்ய சுவாமிகள் மதன சாஸ்திரம் முதலிய காமநூல் பேரறிஞர்கள் எழுதிய மர்ம விஷயங்களை யெல்லாம் 57 அத்தியாயம். 64 மதன லீலை ஆப்டோன் படங்கள். 400 பக்கம். உயர்ந்த பயிண்டு



இதில் காம உற்பத்தி, காதலர் பெருமை, ஆண் பெண் ஜன்மேந்திரியங்கள், பெண்கள் தேக அமைப்பு, அவைகளின் லக்ஷணங்கள். மாதவிடாய் மர்மம், அமிர்த நிலை, படுக்கையறை நுட்பங்கள், இன்பத்தின் லட்சியம், இன்பகாலத்தில் நிகழுவதென்ன? சம்போகத்திற்கு தயாராகுதல், இன்ப மனுபவிக்க வேண்டிய நிலைமை, இதில் காம இச்சை, காமத்தால் ஏற்படும் தீமைகள், சம்போகம் செய்யவேண்டிய கிரமம், எங்கும் காணாத சிற்றின்ப மர்மங்களும், சரச சல்லாப நுட்பங்களும், உண்மையாக இன்பத்தை அடைய வேண்டிய

மர்மங்களும், இன்னும் இதைப்போன்ற நூற்றுக்கணக்கான விஷயங்கள் இதில் காணலாம். மற்றப்போலிப் புத்தகங்கள் போல் அல்ல. இதில் 64 லீலாவினோதப் படங்களுடன் அழகிய தாளில் கண்ணைக் கவரும் காலிகோ பயிண்டு செய்து தயாராக இருக்கிறது.

மதன சக்கரம் பூஜா விதானம், பஞ்சாட்சர சக்கரம், அமுர்தநிலை சக்கரம் முதலியன விளக்கமாகவும், தெளிவான வசன நடையில் பல சாஸ்திர மேற்கோளுடன் பண்டிட் S. R. நமசிவாய ராஜயோகி தொகுத்தப்பட்டு, சென்னை ஹிந்து தியலாஜிகல் உயர்தர கலாசாலைத் மாஜித்தமிழாசிரியர் கோ.வடிவேலு செட்டியார் அபிப்பிராயமும் கூடியது. உண்மையாக உலகில் இன்பத்தை அடையவேண்டிய அநுபவ மார்க்கமும், கல்வி முறை, மதனலீலா முறைகள், சாதிப் பிரிவு, படுக்கையறை நுட்பங்கள் ஒவ்வொரு மர்மங்களை அறிவிப்பது. ☞ இதுகாறும் வெளிவந்த போலி நூல்கள் போன்றதன்று என்பதை வாங்கி வாசித்தவர்களே கூறுகிறார்கள். இது சிற்றின்பத்திற்காக எழுதப் பட்டதன்று. ஆராய்ச்சிநூல் என்றே அறிஞர்கள் மதிக்கின்றனர்.

விலை ரூ. 2-8-0. தபால் சிலவு இனும்

நற்சாட்சி:—“இதுவரையில் வெளிவந்த புத்தகங்களை யெல்லாம் வாங்கி ஏமாந்துபோனேன். தாங்கள் அனுப்பிய புஸ்தகம் உண்மையானதாக யிருப்பதைக் கண்டபின் என் நண்பர்களின் இருவருடைய விலாசத்துக்கு வி. பி. அனுப்பவும்.

இனும்! தமிழ் நூல் விலைப்பட்டி இனும்!!

ஒவ்வொரு லைப்ரெரிகளுக்கும், வாசக சாலைகளுக்கும் வேண்டிய

சிறந்த ஞான தமிழ் நூல்கள்

ஸ்ரீ விவேகாநந்தர் நூல்கள்

	ரூ.	அ.
ராஜயோகமும், பதஞ்சலி யோக ஸூத்ர வியாக்யாநமும்	2	4
பதஞ்சலியோக ஸூத்ர வியாக்யாநம் (தனி)	1	4
கர்மயோகம் விரிவானது	1	0
ஞானயோக ரஹஸ்யம்	2	4
வேதாந்தரகசியம்	2	0
கிழக்கு மேற்கும்	0	8
எதிரொலிகள்	0	8
தற்கால இந்தியா	0	10
வேதாந்த தத்துவம்	0	8
கடிதங்கள் 1-2 பாகங்கள் விரிவானது	1	0
எனது குருநாதர்	0	8
ஞான ரத்னாவளி 1,2, 3 பாகங்கள்	4	10
1004 உபதேசமொழிகள்	2	0
ஞானோதயம்	1	0
அருள் மொழிகள்	1	8

	ரூ.	அ.
அத்வைத சம்பாஷணை	0	8
இராமாயண இரகசியம்	0	8
பக்தியோகம்விரிவானது	0	12
சிகாகோ பிரசங்கம்	0	6
பந்தமும் மோக்ஷமும்	0	2
வேதாந்த நிலைமை	0	6
ஸ்ரீ ராமகிருஷ்ணப்ரஹ்மானந்த சம்பாஷணை	3	0
ஸ்ரீ ராமதீர்த்தபரமஹம்ஸ விஜயம் 1-2பாகம்	5	0
லலிதா ஸகஸ்ரநாமாவளி ஸ்தோத்ரம், லலிதா திரிஸதி, அஷ்டோத்ரம், லலிதா திரிசதி நாமாவளி	0	8
அகஸ்தியர் நயனவிதி 500 உரை நாதமுனிவர்	1	4
அகஸ்தியர் ரணவைத்யம்	0	12
சச்சிதானந்த சிவம்	1	2
மோக்ஷசாதன ரகசியம்	4	0
தர்ம வாசகம் 32 ம்	0	3

முருகன் பாராயண நூல்கள்

	ரூ.	அ.
திருமுருகாற்றுப்படை பரிமேலழகர் உரை	0	8
கந்தரந்தாதி மூலமும் வில்லிபுத்தூர்ஆழ்வார் உரையுர் நூதனமுறை	0	8
கந்தரநுபூதி உரையுடன்	0	8
ஷை விரிவுரை கிளேஸ்	0	12
கந்தர் அலங்காரம் உரை	0	8
ஷை விரிவுரை கிளேஸ்	0	12
கந்தர்சஷ்டி கவசம்உரை	0	8
ஷை விரிவுரை கிளேஸ்	0	12
கந்தர் கலிவெண்பா மூலமும் உரையும்	0	8
பிரதோஷ மகிமை வசனம் சம்பாஷணை	0	4
விபூதி உருத்ராக்க மகிமை சம்பாஷணை	0	6
ஆயுர்வேத ஆசான் வசனம் 30நாளில் வைத்யராகலாம்	2	0
சிவராஜயோகி பாக்கட் டாக்டர் 245 அநுபவ முறைகள்	0	6
திசா, புக்தி, அந்தர பலன்	0	12

	ரூ.	அ.
சோதிட ஆசிரியன் 4 பாகம் தானே சோதிடம் கற்கலாம்	4	0
ஜாதக பாரிஜாதம்	0	12
ஒரு பெண்ணரசியின் பிரஹ்ம ஞானோபதேசம் (வசனம்)	0	8
ஆனந்தராமாயணம் 109 சருக்கங்கள், 12,252 கிரந்தத் தொகை, 9 காண்டம், 14 படம்	6	0
திரிகடுகம் மூலமும் தி. அ. சுப்பராய செட்டியார் விரிவுரையுடன்	0	6
நீதிநெறி விளக்கம் மூலமும் ஷையார் விருத்தியுரையும்	0	8
ராமகிருஷ்ண விஜயம்	1	4
இந்து சங்கீதப்பாட்டுகள் 320	1	8
கொக்கோக வைபவம் என்னும் மன்மதன் திருவிளையாடல் 64 படங்கள் மதன சக்கரம் பூஜா விதானத்துடன்	2	8
த்யாகராஜ கீர்த்தனை	1	4